RECEIVED 1980 -4- PERIODICALS DIVISION JAFFNA CAMPUS LIBRARY

பக்கங்கள் 8

# ஈழநாடு 50 சதம்
The EELANAADU

மலர் 22 பங்குனி 26 ஜ-அ 21 இதழ் 58
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-4-80

## வாகனப்பதிவு: நேற்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் ஆரம்பிக்கப் பட்ட வாகனப்பதிவு காரியாலயத்தில் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியின் உத்தியோகபூர்வமான கார் முதலாவதாகப் பதிவு செய்யப்பட்டது.

பிராந்தியரீதியாக வாகனங்களைப் பதிவுசெய்யும்முறை நேற்றுமுதல் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வாகனப் பதிவு காரியாலயத்தில் நேற்று முதன்முதலாக யாழ் அர

[8-ம் பக்கம் பார்க்க]

★ பிரதான மின்சக்தி உற்பத்தி சாதனம் பழுதானதன் எதிரொலி

# அரைமணிநேர மின்துண்டிப்பு

# நேற்றிரவு அமுலுக்கு வந்தது!

(கொழும்பு)
முப்பது நிமிடநேர மின்சாரத் துண்டிப்பு, நேற்று இரவுமுதல் நாடுபூராவும் அமுலுக்கு வந்தது. இந்த மின்வெட்டு, நாடுபூராவும் பகுதி பகுதியாக, இடத்துக்குஇடம் வித்தியாசப்பட்டு அமுல் படுத்தப் படும் என்று மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக அமைச்சு நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது;

''லக்சப்பானவிலுள்ள பிரதான மின்சக்தி உற்பத்தி சாதனங்களில் ஒன்று (50 மெகவாட் இயந்திரம்) திடீரெனப் பழுதடைந்துவிட்டது. இந்த இயந்திரத்தைப் பழுது பார்க்க சிலநாட்கள் எடுக்கலாம். அதுவரை இரவுநேரங்களில் நாடுபூராவும் பகுதி பகுதியாக அரைமணி நேர மின்வெட்டு அமுலில் இருக்கும். இந்த மின்வெட்டு இரவு 6-30 மணிமுதல் 9-30 மணிவரை மாற்றுநேரத் திட்டத்தின் அடிப்படையில் நாடு பூராவும் அரைமணி நேரத்துக்கு அமுலில் இருக்கும்'' என்று மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் இந்த மின்வெட்டு அமுல் செய்யப்படவில்லை.

## வங்கிக்கிளைகளில் பலத்தபாதுகாப்பு!

(யாழ்ப்பாணம்)
வட பகுதியில் உள்ள மக்கள் வங்கி கிளைகளில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுதிருக்கும் பொருட்டு பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மக்கள் வங்கிக் கிளையிலும் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தால் விசேட பயிற்சியளிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட பாதுகாவலர்கள் சேவையாற்றுவார்கள். ஒவ்வொருவங்கியிலும் அபாய அறிவிப்புச் சங்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

வங்கிகளில் கொள்ளையர்கள் தங்களது 'கைவரிசையை'க் காட்ட முற்படும்போது அபாயச் சங்கிலிருந்து ஒலி வெளிக்கிளம்பும். அந்த ஒலி சுமார் ஒரு மைல்தூரத்திற்கு எதிரொளிக்கும் என்றும் அபாய ஒலி பொலிஸ் நிலையத்திற்கும் கேட்கக் கூடியதாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அபாய ஒலி எழுப்பப்படும்போது அந்த ஒலிகேட்கும் பிரதேசத்திலுள்ள மக்களும், பொலிசாரும் வங்கிகளுக்கு விரைந்து சென்று கொள்ளையர்களைக் கைது செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கொ)

## யாழ். பஸ்நிலைய கடையில் திடீர்த் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)
யாழ். பஸ் நிலையத்திற்கு எதிரிலுள்ள கூல்பார் கடையொன்று பலத்த தாக்குதலுக்குள்ளாகிய சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்தது. மற்றுமொருகடையும் ஓரளவு சேதப் படுத்தப்பட்டது.

இத்தாக்குதலின்போது காயமடைந்த இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நடைபெற்ற போது பஸ் நிலையத்தில் நின்ற பிரயாணிகள் பீதியடைந்து நாலாபக்கமும் ஓடினார்கள். சோடா போத்தல்கள் வீசப்பட்டன என்றும் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக சில சந்தேக நபர்களை பொலிசார் தேடிவருகின்றனர். (க)

## யாழ்-கொழும்பு விமான சேவை

(கொழும்பு)
யாழ்-கொழும்பு விமான சேவை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான சாத்தியக் கூறுகள்பற்றி 'ஏயர் லங்கா' நிறுவனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழுவொன்று ஆராய்ந்துள்ளது என்று இந் நிறுவனத்தின் வர்த்தக முகாமையாளர் திரு. கொலின் மார்ட்டினஸ் தெரிவித்தார்.

இச்சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் ''போயிங்-737'' விமானமே இச்சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் 30 நிமிட நேரத்தில் இரத்மலானையிலிருந்து பலாலிக்கும் பலாலியிலிருந்து இரத்மலானைக்கும் செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## புங்குடுதீவு, சரவணை பகுதிகளில் குடிநீர் வசதிகளுக்காக 2 லட்சம் ரூபா ஒதுக்கீடு

### யாழ். அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு சரவணைப் பகுதியில் நிலவுகின்ற கொடிய வரட்சிக்கு மாற்று நடவடிக்கையாக குடிதண்ணீர் விநியோகம் சீராக நடைபெறுவதற்கு மக்களின் வேண்டுகோளின்பேரில் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

புதிய நடவடிக்கைகளுக்கிணங்க புங்குடுதீவு சரவணைப் பகுதியில் குடிநீர்விநியோக வசதிக்காக இம்முறை இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடுசெய்யுமாறு சமூகசேவை இலாகா அதிபருக்கு மாவட்டச்செயலாளர் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளதோடு, இப் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டுமென்றும் கோரியுள்ளார்.

## ஆனமடுவ தேர்தல் மே 7-ல்

(கொழும்பு)
ஆனமடுவ தொகுதி இடைத் தேர்தல் அடுத்த மாதம் 7ம் திகதி நடைபெறும்.

இந்த இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நேற்று புத்தளம் கச்சேரியில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஐக்கியதேசியக்கட்சி சார்பில் திரு. அசோகா வடிகமங்காவ, சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் திரு. சத்ததிஸ்ஸ வடிகமங்காவ, மக்கள் விடுதலை முன்னணி சார்பில் உபதிஸ்ஸ கமநாயக்கா ஆகியோருடன் சுயேச்சை அபேட்சகர்களாக செல்வி ரி. ஆர். பி. நவரத்ன, திருவாளர்கள் எஸ். நவகத்தேகம, ரி. என். கருணரத்ன, சந்திராதனசேன ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

## 10 லட்சம் பேர் மரணம்!

[லண்டன்]
புகைபிடித்தல் காரணமாக உலகில் வருடந்தோறும் பத்து லட்சப்பேர் மரணமடைவதாக ஐ. நா. புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## யாழ். அரச செயலகத்துக்கு 44 தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள்

### யாழ். அரச அதிபர் முயற்சிமீது நேற்று வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு.யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்ட தீவிர முயற்சிகளைத் தொடர்ந்து, யாழ். அரசாங்க செயலகத்துக்கு நேற்று நாற்பத்திநான்கு தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள் வந்து சேர்ந்தன. இதுவரை யாழ். அரசாங்க செயலகத்தில் மூன்று தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள் மட்டுமே உபயோகத்திலிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டச் செயலாளராக திரு யோகேந்திரா துரைசுவாமி பதவியேற்றதும், யாழ். மாவட்ட நிர்வாகத்தை முழுக்கமுழுக்க தமிழிலேயேநடத்த வேண்டும் என்று [illegible] நிடம் வலியுறுத்தியிருந்தார். இதுசம்பந்தமாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு அவர் சமர்ப்பித்திருந்த கோரிக்கையில் யாழ். அரசாங்க செயலகத்தில் தமிழில் நிர்வாகம் நடத்துவதில் நடைமுறைக்கஷ்டம் காணப்படுகிறதென்றும் தமிழ் தட்டெழுத்து இயந்திரப் பற்றாக்குறை, ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக தமிழில் நிர்வாகம் நடத்தமுடியாதிருப்பதாகவும் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

வெங்காய விதை
இறக்குமதி செய்யப்பட்ட பூசா ரெட்ரக வெங்காய விதைகள் இன்றுமுதல் கிடைக்கும்
உங்கள் தேவைக்கு!
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 5386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 பேர் கையொப்பமிட்டு

# உயிர்ப்பலிக்கு அனுமதிகோரி ஜனாதிபதிக்கு 'விண்ணப்பம்

[மாவிட்டபுரம்]

இந்துசமய விவகார அமைச்சின் உத்தரவின் பேரில் ஆலயங்களில் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டுவரும் இச்சமயத்தில் உயிர்ப்பலிக்கு அனுமதி கோரி 100 பேர் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

கருகம்பானை சவுணுவத்தை வைரவர் ஆலய முகாமையாளர் திரு. மு. செல்லக்குட்டியும் அவ்வாலய சுற்றுடலிலுள்ள மேலும் 100 பேரும் கையொப்பமிட்டு இவ்விண்ணப்பத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

பாரம்பரியமாக இவ்வாலயத்தில் தாம் உயிர்ப்பலி செய்துவந்ததாகவும், உயிர்ப்பலியை நிறுத்தினால் பாரதூரமான விளைவுகளைத் தாம் எதிர்நோக்கவேண்டி யேற்படுமெனவும் நோய், துன்பம், கஷ்டநஷ்டங்களைத் தாம் அனுபவிக்கநேரிடுமெனவும் சுட்டிக்காட்டி இம்முறையும் வழமைபோல் உயிர்ப்பலிருக்கு அனுமதி தருமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இவ்வாலயத்தில் உயிர்ப்பலியிடுவதற்காக வளர்த்த ஆடுகளை இடையிலே விற்ற பலர் அடைந்த துன்பங்களையும் இவ்விண்ணப்பத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விண்ணப்பத்தின் பிரதிகள் இந்துசமய விவகார அமைச்சர் திரு. செ. இராசதுரை, யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. [அ]

## வங்கிக் கிளையைத் திறக்குமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

கடந்த 1978ம் ஆண்டு மூடப்பட்ட மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு மானிப்பாயைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று கடந்த வாரம் இலங்கை வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் திரு. கே. சி. குணநாயகத்தை நேரில் சந்தித்துக் கேட்டுக்கொண்டது

இவ்வங்கிக் கிளை மூடப்பட்டிருப்பதினால் வாடிக்கையாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக தூதுகோஷ்

(5-ம் பக்கம் பார்க்க)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து புதிதாக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட நல்ல நிலைமையில்உள்ள ஹொண்டா (Honda) CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சாந்தி ரயர் வேக்ஸ்' 218/2, முனீஸ்வரர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8085. (5418)

காட்சியறை நிலையிலுள்ள 34ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட டோயோட்டோ ஹைஏயஸ் (TOYOTO HIACE) வேன் விற்பனைக்குண்டு. 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 541[illegible]

புத்தம் புதிய Baby Belling Eelectric Cooker Oven ஹம் Kelminator 3 Star Automatic Refreigerator ம் விற்பனைக்கு உண்டு. சரவணமுத்து 3, நாலாம் குறுக்குத் தரு யாழ்ப்பாணம் 540[illegible]

### தேவை

அக்கராயனிலுள்ள அரிசி ஆலைக்கு அனுபவம் வாய்ந்த தொழிலாளி (Grinder) உடன் தேவை. விண்ணப்பிக்கவும். உரிமையாளர், அரிசி ஆலை, அக்கராயன். 5420


## இன்றைய இசை விழாவில்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்று வரும் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 22வது ஆண்டு தமிழ் இசை விழாவின் 7ம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 5-45 மணிக்கு அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவ, மாணவிகளின் பாட்டுக் கச்சேரி, மிருதங்க வாத்தியக் கச்சேரி

6-30 மணிக்கு திரு. கே. இராமநாதன் - பாட்டு, திரு. எஸ். சர்வேஸ்வர சர்மா - வயலின் திரு எம் சிதம்பரநாதன் - மிருதங்கம்.

7-45 மணிக்கு "இசையரசு" திரு தா இராசலிங்கம், செல்வி ஜெயராணி இராசலிங்கம்-பாட்டு, திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி-வயலின் திரு. வி, அம்பலவாணர் - மிருதங்கம் (கொ-)

# கீரிமலை புனித நகரமாகும்?

(மாவிட்டபுரம்)

சரித்திரப் பிரசித்திவாய்ந்ததும், சைவமக்களது புனித ஸ்தலமாக விளங்குவதுமான கீரிமலையின் புனிதம், பாரம்பரியம் என்பவற்றைப் பாதுகாக்க "கீரிமலை புனித அமைப்புச் சபை' என்ற பெயரில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் இடம்பெற்ற சைவப்பெரியார்கள் சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டமொன்றிலேயே இந்தஅமைப்பு உருவாக்கப்பட்டது

பிரமஸ்ரீ கு நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கீரிமலை அபிவிருத்தி குறித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, இந்து சமய விவகார அமைச்சர் திரு. செ. இராசதுரை, யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமிஆகியோருக்குபின்வரும் மகஜரை அனுப்புவதாகவும் முடிவாகியது.

"இந்து சமய விவகார அமைச்சு கீரிமலைப் பிரதேசத்தை புனித நகராக பிரகடனம்செய்து அபிவிருத்திசெய்ய முடிவு செய்துள்ளதாக அறிகிறோம். இது வரவேற்கத்தக்கதாகும் ஆனால் அதே நேரத்தில் கீரிமலையை இந்துமக்களது ஒரு புனித இடமாகக்கருதி அபிவிருத்தி செய்யவேண்டும் கீரிமலை சரித்திரப்பிரசித்திவாய்ந்ததும், இந்து மக்களது ஓர் புனித இடமாகவும் விளங்குவதை உணர்ந்து அதற்கேற்றவாறு அபிவிருத்தி செய்யப்படவேண்டும். கீரிமலையில் பல இந்து ஆலயங்கள், மடங்கள் போன்றன உள்ளன அவற்றின் பாரம்பரியங்கள் காக்கப்படல்வேண்டும். கீரிமலையை அபிவிருத்தி செய்யும்போது இப்பகுதி சைவ நிறுவனங்களது ஆலோசனைகள் பெறப்பட வேண்டும்"

மேற்படி கீரிமலை புனித அமைப்புச் சபையின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள், உபதலைவர்கள்: எம் ஞானப்பிரகாசம், ஆர். என். சிவப்பிரகாசம் செல்வி தங்கம்மா அப்பாக்

[5-ம் பக்கம் பார்க்க]

தேர்தல் மாவட்டங்கள்

## கூட்டணியின் சிபார்சு தற்கொலைக்கு ஒப்பானது'

[புலோலி]

"தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுமுன் தமிழர் விடுதலைக்கூட்டணி வடமாகாணத்தை யாழ்ப்பாணம், வன்னி என்று இரு தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை பத்திரிகையில் பார்த்து ஆச்சரியப்பட்டேன் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது தனிநாட்டுக்கோரிக்கை யாழ்ப்பாணத்தவன் இழப்பதாகப் பிரசாரம் செய்தார். அரசாங்கத்தால் மன்னார், வவனியா, முல்லைத்திவு மாவட்டங்களைத் திட்டமிட்ட குடியேற்றமூலம் சிங்களப் பெரும்பான்மை மாவட்டங்களாக்குவதற்கு முயற்சிகள் நடக்கின்ற இவ்வேளையில் யாழ்ப்பாணக்குடாநாட்டை வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிப்பது தற்கொலைக்குச் சமமாகும்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், முன்னாள் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. கே. ஜெயக்கொடி, தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு முன்னிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அளித்த சாட்சியம் சம்பந்தமாகக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: "யாழ்ப்பாண மக்கள் நிலமில்லாப் பிரச்னையில் தவிக்கும்போது அவர்கள் மன்னார், வவனியா மாவட்டங்களில் குடியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளபோது யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கிளிநொச்சித்தொகுதியே பிரித்தெடுக்கப்படுகின்றது. இது தேர்தல் மாவட்டங்கள் தானே என்று இருந்துவிட முடியாது. காலக்கிரமத்தில் யாழ். குடாநாடு மாத்திரம் ஒரு நிர்வாக மாவட்டமாகவும் கிளிநொச்சி. மன்னார் மாவட்டத்தோடும் முல்லைத்தீவு மாவட்டத்தோடும் இணைக்கப்பட்டுவிடும்.

"சேருவிலத் தொகுதியை உருவாக்கியபோதும் முல்லைத்தீவைத் தனிமாவட்டமாக்கி வவனியாவோடு மதவாச்சியை இணைக்க வழிவகுத்தபோதும் விட்ட பிழைகளே இன்றும் தொடருகின்றன யாழ் குடாநாடு ஒரு தேர்தல் மாவட்டமாக இருந்தால் விகிதாசாரப்படி பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படும்போதுதமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஐம்பது வீதப் பிரதிநிதித்துவமே கிடைக்கும். அப்படியானால் தமிழ் ஈழம், பிரதேச சுயாட்சி, சுயநிர்ணய உரிமை இவையெல்லாம்என்னவாகும்?

மன்னார் மாவட்டம் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, யாழ்ப்பாணம், கோப்பாய், காங்கேசன்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை ஆகிய தொகுதிகள் ஒரு தேர்தல் மாவட்டமாகவும், வவனியா. முல்லைத்திவு, கிளிநொச்சி, சாவகச்சேரி, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய தொகுதிகள் ஒரு தேர்தல் மாவட்டமாகவும் பிரிக்கப்பட்டால் மிகவும் பொருத்தமாக இருக்கும். (அ)

## புத்தாண்டு பலன் நூல்

"சாதிடப்பேராசன் தமிழ் மணி செ. தெல்லியூர் கணித்து எழுதிய ஸ்ரீரௌத்திரி வருட 'உங்கள் புத்தாண்டுப் பலன்' (13-4-8 0முதல் 12-4-81)வரை சோதிடப் புத்தகம் கிடைக்கப் பெற்றோம்.

இப்புத்தகத்தில் வரப்போகும் ஸ்ரீரௌத்திரி வருஷப் பொதுப்பலனுடன் 12 இராசிகளுக்குமுரிய பலன்களும் இரத்தினச் சுருக்கமாக இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கந்தாய பலன், ஆதாய விபரம் மற்றும்' 12 இராசிக்காரரும் தத்தம் வழிபாடுகளுக்குரிய தெய்வங்களின் விபரங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள "ஏ எஸ்' ஸால் [illegible]

—வாமா


## விற்பனையாகின்றன:

5 வகுப்பு

புலமைப் பரிசிற் பரீட்சைக்கான

### பயிற்சிகள்

பொது உளச் சார்பு.................8-50
கணிதப் பயிற்சி.....................5-50
தமிழ் மொழி பயிற்சி...............5 50

வெளியீடு:

**ஞானசுரபி புத்தகக் கம்பனி,**
217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
542[illegible]



## யாழ்ப்பாண திவ்விய ஜீவனச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான சட்டம்

எம். சிவசிதம்பரம் ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48-ம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "யாழ்ப்பாணதிவ்விய ஜீவனச்சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்" எனப்படும் ஒரு சட்டமூலத்தை மேற்குறிப்பிட்ட பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

பின்வரும் நோக்கங்களைக் கொண்ட மேற்கூறிய சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் குறிக்கோளாகும்.

(அ) (I) புத்தகங்களையும், துண்டுப்பிரசுரங்களையும், மாத வெளியீடுகளையும் வேறு பருவவிதழ்களையும் வெளியிடுவதன் மூலமும்

(II) சமய உரையாடல்களையும், மாநாடுகளையும், சத்தரங்குகளையும், சமய ஆறமர்வுகளையும் நடாத்துவதன் மூலமும்,

(III) ஆசனங்கள், பிராணயாமம், பிற செயல்கள் என்பனவற்றின் முறைமையான பயிற்சியுடன் கூடிய பூசை, வணக்கம், பக்தி, ஞானம், கர்மம், அத்தயோகம் என்பன வாயிலாகப் பங்குபற்றுனர் ஆத்மீக மறுபிறப்பு அடைவதனை இயலச்செய்வதற்கென யோக உடற்பயிற்சிக்கான, ஒழுக்க ஆத்மீக சாதனைகளுக்கான நிலையங்களை அல்லது கிளைச் சங்கங்களைத் தாபிடபதன் மூலமும்,

(IV) ரிஷிகள், ஞானிகள், இறைவாக்கினர், யோகிகள் ஆகியோரின் சனாதன தர்மப் போதனைகளைப் பரப்புவதன் மூலமும்,

(V) நூலகங்களையும், வாசிகசாலைகளையும் தொடங்கிப் பேணி வருவதன் மூலமும்,

(VI) சேவை, அன்பு, ஈகை, புனிதம், தியானம், மெய்ம்மை, உணர்வு ஆகியவற்றைப் பயிற்றுவதன் மூலமும்,

### ஆத்மீக அறிவினைப் பரப்புதல்:

(ஆ) சமயப் பாடசாலைகள், விடுதிகள், உறைவிடங்கள், அனாதைப் பராமரிப்பு நிலையங்கள், மடங்கள் ஆகியவற்றைத் தாபித்தலும் பேணி வருதலும் அல்லது அவற்றிற்கு உதவியளித்தலும். மற்றும் பலவும்.

மு. சிவசிதம்பரம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
நல்லூர்.

5419


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உண்மையைவிடச்சிறந்த சமயம் யாதும் இல்லை. உண்மையைக் காட்டிலும் சிறந்த அறம்யாதும் இல்லை. உண்மையைப் பார்க்கிலும்சிறந்த தர்மம் யாதும் இல்லை. உண்மையிலும் சிறந்த பொக்கிஷம் யாதும் இல்லை உண்மையே கடவுள், கடவுளே உண்மை.

— சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### காவலூர்-கிளிநொச்சி பஸ் சேவை

தீவுப்பகுதிக்கும் கிளிநொச்சித் தொகுதிக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு என்பதை பலர் நன்கு உணர்வார்கள்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த பலர் கிளிநொச்சியில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள அதேவேளையில் பெருந்தொகையானோர் வர்த்தகத்துறையிலும் ஈடுபட்டுள்ளனர். அங்கு வாழ்ந்து வரும் தீவகமக்கள் தமது வீடுகளுக்கு வாரத்தில் ஒரு முறையோ அல்லது பல முறையோ வந்துபோவதில் மிகுந்த சிரமமடைந்துவருகின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து பல மணித்தியாலங்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்வதற்கு மேலும் பல மணி நேரம் பஸ் நிலையத்தில் காத்து நிற்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து குறிகட்டுவானுக்கு சேவையிலீடுபடுத்தப்பட்டிருக்கும் இரண்டு பஸ் வண்டியில் ஒன்றை கிளிநொச்சியிலிருந்து ஊர்காவற்றுறைக்கு சுருவில் ஊடாக சேவையில் ஈடுபடுத்தினால், பல இன்னல்களை அனுபவித்து வரும் பிரயாணிகள் நன்மை அடைவர். இது தொடர்பாக கிளிநொச்சிச்சாலை அத்தியட்சகரும் சம்பந்தப்பட்டவர்களும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

-தென்கரம்பனூரான்

### தந்தி வந்த வேகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தி லுள்ள தமது தந்தைக்கு களுவாஞ்சிக்குடியிலிருந்து ரயிலில் புறப்படுவதாகவும் மாலை ரயில் நிலையத்தில் காத்து நிற்குமாறும் தந்தி மூலம் தெரிவித்த இளம் பெண் ஒருவர் வீடு வந்து சேர்ந்து 8மணித்தியாலங்களின் பின்னரே தந்தி வந்து சேர்ந்ததாம்

கடந்த மூன்றும் திகதி காலை களுவாஞ்சிக்குடி தபால் நிலையத்திலிருந்து செல்வி. ஈஸ்வரி ஐயாததுரை என்பவர் கொடுத்திருந்த தந்தி யாழ். சுண்டிக்குளியிலுள்ள அவரது இல்லத்திறகு 5ம் திகதியே விநியோகிக்கப் பட்டதாம். [கெ]

### கல்வி அதிபரை சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத்தமிழர் முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. ஆ. கணபதிநாதன் தலைமையில் சென்ற தூதுகோஷ்டியொன்று வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. தி மாணிக்கவாசகரைச் சந்தித்து சிறுபான்மைத் தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகப் பல கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது தூதுக்குழுவினரின் குறைபாடுகளைக் கேட்டறிந்த கல்விப்பணிப்பாளர் உடனடியாக சில கோரிக்கைகளை நிறைவேற்றியதோடு ஏனைய குறைபாடுகளையும் தாம் கவனித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இத் தூதுக்குழு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரையும் சந்தித்து சிறுபான்மைத் தமிழரின் குறைபாடுகள்பற்றி கலந்துரையாடி மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கவுள்ளது [கெ]

# 'அமிரி'ன் யாழ்.நகர மண்டப பேச்சு: சுயாட்சி 'நவம்' விளக்கம்

விடுதலை வேண்டிநிற்கும் தமிழ் மக்களிடையே அரசியல்வாதிகள் ஒருவர் மீது ஒருவர் சொல்லம்பு தொடுத்து ஒருத்தரை ஒருத்தர் கடித்துக்கொண்டிருப்பதனால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை என்பது எனது கொள்கை. அது ஆற்றுதவன்செயல் மாற்றான் பார்த்துச் சிரிப்பதற்கு மட்டும் பயன்படும். சென்ற 1977ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலின்போது திரு. அ. அமிர்தலிங்கத்தின் அணியினர் தங்களால்தான் 'தமிழ் ஈழம்' அமைக்க முடியும், அதற்காக தங்களையே பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு கேட்டார்கள். மக்கள் அவர்கள் சொன்னதையே நம்பி அவர்களையே தெரிந்தெடுத்து ஒரு கூட்டமாகப்பாராளுமன்றத்துக்குஅனுப்பினர்கள். இந்த ஏகோபித்த தீர்ப்புக்குத் தலைவணங்கியது தமிழர் சுயாட்சிக் கழகம் தமிழ் ஈழத்தை யார் கொண்டுவந்தாலென்ன? மக்களின் விடுதலைதான் பிரதானம். அமிர்தலிங்கம் அணியினரை மக்கள் நம்பும்பொழுது நாம் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று சுயாட்சிக் கழகத்தினர் தங்கள் மனக்கொதிப்பை அடக்கி வைத்தார்கள் 'பார்த்தீர்களா பெருமக்களே, உங்கள் தீர்ப்பின்படி நாங்கள் பாராளுமன்றம் சென்று நிர்ணய சபை அமைத்து தமிழ் ஈழம் வர இருந்த சமயத்தில், வெள்ளை திரண்டுவரும் பொழுது தாழியை உடைத்தவன் போல இந்த நவரத்தினம் எல்லாவற்றையும் கெடுத்துப்போட்டார்' என்று சொல்ல இடங்கொடுக்கக்கூடாது என்றிருந்தோம் ஆனாலும் என்ன?

யாழ் மாநகர சபை மண்டபத்தில் நிகழ்ந்த தந்தை செல்வா பிறந்த நாள் விழாவிலே திரு. அமிர்தலிங்கம் பேசியதாக 2-4-80 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் படித்தேன். முதலிலே எனது மனதில் பட்டது இதுதான், எந்த இளைஞர்களை ஏணிப் படிகளாகப் பாவித்து உச்சிக்கு ஏறினாரோ அதே ஏணியை இட்டோ உச்சியில் இருந்துகொண்டு உதைத்துத் தள்ளுகிறார் அமிர்தலிங்கம். அதனால் நமக்கென்ன என்று வாளாவிருப்போமா என்று தோன்றியது. மறுபக்கத்தில், இந்தப் பேச்சின் வடிகட்டின சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்தாவிட்டால், மக்கள் திரு அமிர்தலிங்கத்தின் அரசியலை இனம்கண்டுகொள்வதற்கு உதவாவிட்டால் இப்பொழுது எமது மக்களைப் படுநாசத்திற்கு இழுத்துச்செல்லும் அரசியலுக்கு நானும் உடந்தையாக இருந்தேன் என்ற பழிச்சொல் என்னையும் வந்துசாரும் என்றுதோன்றியது. சரித்திரத்தைத்திரிபுபடுத்துவதில் பண்ணுவித்தானவையும் விஞ்சிவிடுவார்போல் தோன்றுகிறது திரு. அமிர்தலிங்கம். அவர் பேச்சு முழுவதையும் பற்றி இளைஞர்களும் தமிழ் வாக்காளர்களும் என்ன நினைக்கிறார்களோ தெரியாது. அதைப் பற்றி எழுத இது இடமுமல்ல. ஆனால் என்னைச் சம்பந்தப்படுத்திப் பேசியதாக வெளிவந்த விஷயங்களின் உண்மை நிலையை விளக்கவேண்டியது எனது கடமையாகிறது.

அதற்கு முன், 'ஈழநாடு' ஆசிரியருக்கு ஒரு வேண்டுகோள் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'கல்கி' சஞ்சிகையின் 28-10-1979ம் திகதி இதழில் 'சிறு நாடு சிறந்தோங்கட்டும்' என்ற தலைப்பில் இலங்கைத் தமிழர் பற்றிய தலையங்கம் ஒன்று வெளியானது. இந்தத் தலையங்கத்தையும் திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சையும் 'ஈழநாட்டில்' ஒரே பக்கத்தில் அடுத்தடுத்த கலங்களில் ஒன்றுக்கப்பக்கத்தில் மற்றதாக மறுபிரசுரம் செய்யவேண்டும். 'ஈழநாடு' வாசகர்கள் அவற்றை ஒத்துப்பார்த்து வாசித்து உணர்ந்துகொள்வதற்கு உதவியாகவிருக்கும். 'தமிழ் ஈழம்', 'விடுதலை' 'சுயநிர்ணய உரிமை', 'அரசியல் நிர்ணய சபை' என்று என்ன என்ன வெல்லாமோ கூவினார்கள், எல்லாம் வெறும் தேர்தல் சுலோகச் சீட்டைகள் என்பதை இப்பொழுதாவது மக்கள் உணரட்டும். 'கல்கி' அடியெடுத்துக் கொடுக்க எவ்வளவு கீழ்ப்படிதலோடு திரு. அமிர்தலிங்கம் பாட்டை முடித்திருக்கிறார் என்பதை உணரட்டும்.

### எங்கே, எப்பொழுது?

1965ம் ஆண்டு டட்லி சேனநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை நான் எதிர்த்தேன் என்றும், அப்படி எதிர்த்து கட்சியைப் பிளவுபடுத்திவிட்டு வெளியேறினேன் என்றும் திரு அமிர்தலிங்கம் தனக்கே உரித்தான பாணியில் நா கூசாமல் கூறுகின்றார். எங்கே, எப்பொழுது, எப்படி எதிர்த்தேன் என்று கூறுவாரா? அந்த ஒப்பந்தம் எனது சொந்தக் கைப்பட எழுதப்பட்டது. அது இன்னும் என் கைவசம் இருக்கின்றது. திரு. டட்லி சேனநாயக்கா தனது முதல் எழுத்துக்களை (Initial) இட்டிருக்கிறார். அதில சம்பந்தப்பட்ட பிரமுகர்கள் சிலர் தங்கள் கைப்பட திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். அதற்குத் சட்டசுப்பிரதிகள் எடுப்பதற்காக தற்போதைய ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன வாசிக்க டைப் அடித்தவன் நான். தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றவிஷயம் பேசப்பட்டபொழுதெனக்கும் திரு. டட்லி சேனநாயக்காவுக்குமிடையில் கடும் வாக்குவாதம் மேற்பட்டது. கடைசியாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆலோசனையின் பேரில் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வசனம் புகுத்தப்பட்டது. இப்படியாக சிரமப்பட்டு உருவாக்கிய ஒப்பந்தத்தை நான் ஏன் எதிர்க்க வேண்டும்? அன்றைய சூழ்நிலையில் இது ஒரு முன்னேற்றமானது என்பதே எனது கருத்து. அதனால்தான், பின்பு அதிலிருந்த தமிழ்மொழி சம்பந்தமான ஷரத்தை அமுல் செய்வதற்காகக் கொண்டுவர விருந்த விதிகளை உருவாக்குவதில் முக்கிய பங்கெடுத்தேன்.

### சாபக்கேடு

ஆனால் ஒப்பந்தம் எழுதி முடிந்த பின் வீடு வந்து சேர்ந்தவுடனே, இனித் தமிழரசுக்கட்சி மந்திரிப் பதவி ஏற்று அரசாங்கத்தில் சேர வேண்டும் என்று திரு. திருச்செல்வம் சொன்னார் அடுத்த நாள் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலே திரு. செல்வநாயகமும் அப்படியே சொன்னார் இதை நான் வன்மையாக எதிர்த்தேன். இது முன்னேற்பாடாக முடிவுசெய்யப்பட்டிருந்த விஷயம் என்று அப்பொழுது எனக்குத் தெரியாது. மந்திரிப் பதவியேற்று அரசாங்கம் நடத்துவதில் பங்குகொண்டால் கட்சி அழிந்துபோய்விடும். கட்சி மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்துவிடுவார்கள். இது ஒரு பாரதூரமான விஷயம் என்றேன். தமிழ் மக்களையும் அழிவுப்பாதையில் இட்டுச்செல்லும் என்றெல்லாம் எடுத்துச்சொல்லி எதிர்த்தேன் திரு. பொன்னம்பலம் மந்திரிப் பதவி ஏற்றதால் காங்கிரஸை உடைத்துவிட்டு வெளியேறிய திரு. செல்வநாயகம், பின்பு தமிழரசுக் கட்சியை அங்குரார்ப்பணஞ் செய்து நிகழ்த்திய தலைமைப் பேருரையில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நினைவுபடுத்தி, பதவி ஆசை தான தமிழ்மக்களின் சாபக்கேடு, எமது தமிழரசு இலட்சியம் கைகூடும் வரையில் நாங்கள் மந்திரிப்பதவி ஏற்க மாட்டோம் என்று சொன்னாரே, அதை நாங்கள் காப்பாற்றவேண்டும் என்று வற்புறுத்தி, பதவியேற்பதை எதிர்த்தேன். நாங்கள் அரசாங்கத்தில் சேராமல், அரசாங்கக் கட்சியுடனும் ஒன்றிணையாமல், அரசாங்கத்திற்குப் புறம்பாக இருந்து, தேவை ஏற்படும்பொழுது அரசாங்கத்திற்குச் சார்பாக எமது வாக்குகளைக் கொடுத்து, விழவிடாமல் பாதுகாத்துக் கொண்டு, ஒப்பந்தத்தை அமுல் நடத்துகிறார்களா என்று பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். தவறினால் எமது ஒத்துழைப்பை வாபஸ்பெறலாம். இப்படி நடந்தால் கட்சியின் செல்வாக்கு மேலோங்குவது மட்டுமல்லாமல் இனத்தின் உண்மையான தன்னலமற்ற பாதுகாவலர்களுமாவோம் என்பதே எனது வாதம் சமீப காலத்திலே இப்படியானதொரு இராஜதந்திரத்தைக் கையாண்டுதான் இந்திரா காங்கிரஸ் சரண் சிங்கிற்கும் சவான் காங்கிரசுக்கும் ஆதரவு கொடுத்ததும் மொரார்ஜி தேசாய் அரசை வீழ்த்தியதும், பின்பு அந்த ஆதரவை வாபஸ்பெற்று இந்தியப் பாராளுமன்றத்தைக் கலைக்கச்செய்ததும் என்பதை இந்நாட்டிலும் மக்கள் அவதானித்திருப்பார்கள். ஆனால் அன்று எமது இனத்தின் சாபக்கேடான பதவியாசை தான் வென்றது. திரு. திருச்செல்வம் மந்திரியானார் நானும் கட்சியின் தீர்மானத்திற்குத் தலைவணங்கினேன் திரு அமிர்தலிங்கம் திரிபுபடுத்துவதுபோல் வெளியேறவில்லை.

பின்பு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதா வந்தது. அதைக் கட்சி எதிர்க்க வேண்டுமென்று சொன்னேன். ஏனென்று இங்கே விளக்கப் புகுந்தால் ஒரு முழு 'ஈழநாடு' பத்திரிகையே போதாது மசோதாவினால் தமிழினத்திற்கு நஷ்டமே என்பதை ஒப்புக்கொண்டபோதிலும் மந்திரி பதவியைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையே மேலிடத்தைப் பிடித்திருந்தது. இருப்பினும் பிளவைத் தவிர்ப்பதற்காக எனது எதிர்ப்பைப் பாராளுமன்றத்தில் கிளப்புவதில்லை என்று சமரச முடிவை ஏற்படுத்திக்கொண்டோம். எனவே இன்னும் கட்சியில் பிளவோ, பெலவீனமோ புகுந்துவிடவில்லை.

இத்தனைக்கும் அரசாங்கம் பெரும்பான்மை இனத்தின் நலனுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்ததேயன்றி, டட்லி-செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டும் என்ற சிந்தனையே இல்லை. தமிழ்மொழி உபயோக விதிகள் நிறைவேற்றப்பட்டிருந்தனவேயன்றி, உருப்படியாக மக்கள் வாழ்க்கையில் அதன் பிரதிபலிப்பைக் காணவில்லை மாறாகச் சிங்களம் படிக்காத தமிழ் அரசாங்க ஊழியர்களை டிஸ்மிஸ் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. கட்சியின் மந்திரியால்கூட ஒன்றும் செய்யமுடியவில்லை.

### அடையாள அட்டை மசோதா

இந்த நிலையில் அடையாள அட்டை மசோதா வந்தது. அந்தச் சம்பவத்தைப் பற்றி எல்லோரும் அறிவார்கள் ஆனால் அறியாமல் இருக்கக் கூடியது என்னவெனில் ,10 வருஷங்களின் பின், கட்டுப்பாட்டை மீறியதற்காகத் திரு. தொண்டைமான் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்காமல் விட்டதற்கு விளக்கம் கூறிய அதே அமிர்தலிங்கம், அன்று, 1968-ம் ஆண்டு, பாராளுமன்றத்திலே அடையாள அட்டை மசோதாவை எதிர்த்துப் பேசிவிட்டு வெளியிலே வந்திருந்த என்னை உடனேயே அணுகி "உங்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றார். இரண்டு நாட்களுக்குப் பின்பு அப்படியே செய்தும் முடித்தார் யார் பிளவு படுத்தியவர்? யார் இயக்கத்தைப் பெலவீனப்படுத்தியவர் திரு. அமிர்தலிங்கத்தின் அரசியலுக்குப் பலிக்கடாவாகியவன் நான் மட்டுமல்ல, திரு. செல்வநாயகமும்தான்.

ஒரு விடுதலை இயக்கத்தைக் கட்டியெழுப்புவதானால் சிறந்த பண்புகள் உள்ள ஒரு தலைவனை நடுநாயகமாக வைத்துக்தான் கட்டியெழுப்ப முடியும். இந்தியாவிலே மகாத்மா காந்தியை வைத்து வளர்ந்தார்கள். அதேபோல இங்கே இலங்கையிலே பெரியவர் செல்வநாயகத்தைவைத்துதமிழரசு இயக்கம் வளர்க்கப்பட்டது அந்தத் தலைவனுக்கு இயலாமை வந்துறுங்காலத்தில் தூக்கி எறிவது பண்பான அரசியலொழுக்கமு ஆகாது. அதற்கு இடங்கொடுக்கும் இனம் விடுதலைக்கு அருகதையற்றது. தனக்கு உகந்தவர்களை அணிசேர்த்து, வட்டுக்கோட்டையிலே மகாநாடு கூடி, வாழ்நாள் முழுவதும் ஊனுறக்கம் பாராது உடல் நலத்தைக் கவனியாது உழைக்கும் பணம் எல்லாவற்றையும் இயக்கத்தை வளர்க்கும் பத்திரிகைக்கே அள்ளிக்கொடுத்த ஒரு தலைவன் செல்வநாயகம் போதாதென்று அவருக்கு இணையாக திரு பொன்னம்பலத்தையும் திரு. தொண்டமானையும் முத்தலைவர்களாக வைத்து, இல்லாத ஒரு "ஒற்றுமை'' என்ற போலி மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, 30 வருஷங்களாகக் கட்டி எழுப்பிய தமிழரசு இயக்கத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, தொகுதி விட்டுத் தொகுதிமாறி கிரிமலைக்குப் போய் ஒரு முழுக்குப்போட்ட திரு. அமிர்தலிங்கம், இன்று என்னைப் பார்த்து கட்சியைப் பெலவீனப்படுத்தியவர் என்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. வட்டுக்கோட்டை மகாநாடு முடிந்தபின் "என்ன சேர், மூன்று தலைவர்கள் எதற்கு?'' என்று கேட்டவர்களுக்கு ' திரு. செல்வநாயகம் அப்படிச் செய்துவிட்டார்கள், அதற்கு நான் என்ன செய்ய?'' என்று சொல்லி கண் கலங்கி, மனமுடைந்திருந்த தோற்றத்தைக் கண்டவர்கள் இன்னும் தெல்லிப்பழையில் உயிருடன்தான் இருக்கிறார்கள் இன்று அதை "தந்தை செல்வா'' என்ற பெயரை வைத்து அரசியல் வியாபாரம் நடந்துகொண்டிருக்கிறது.

நானும் ஒரு காலத்தில் இளைஞனாக இருந்தவர்தான்; அந்த இளமைப் பருவத்தில் நானும் தவறு செய்ததுண்டு ...

முதிர்ச்

15-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணியின் அணுகுமுறைகள் தமிழீழவிடுதலையை பின்தள்ளுகின்றனவா?

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய அணுகுமுறைகள் தமிழ் ஈழ விடுதலையைப் பின்தள்ள வில்லை" என்ற கருத்தை ஆதரித்து சட்டத்தரணி திரு. மு திருநாவுக்கரசு, வண்ணை ஆனந்தன், பொன் மதிமுகராஜா ஆகியோர் வாதாடினர்.

## மாற்றான் வலிமையை கருத்தில் கொள்ளவேண்டும்

சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு பேசும்போது கூறியதாவது:

ஓர் அரசியல் இயக்கம்பற்றி விமர்சிப்பதற்கு வரலாற்று ஆசிரியர்களால்தான் முடியுமே தவிர எம்மால் அல்ல. மூன்று ஆண்டுகளில் என்னத்தைச் சாதித்துவிட்டோம் என்கிறார்கள். அரசியல் இயக்கத்தின் பாதையில் மூன்று ஆண்டுகள் மூன்று நிமிஷங்களே என்பதை உணரவேண்டும். இந்த மூன்று நிமிஷங்களுள் நாம்செய்ததை வருங்காலத்தில் வரலாறு எழுதுபவர்கள் விமர்சிக்கும்போது தான் அணுகுமுறை சரியா? பிழையா என்பதை ஆராய முடியும்.

### ஆணைக்குழுக்க நியமனம்

தமிழும், சிங்களமும் தேசிய மொழிகளாக்கப்பட்டன. தமிழ்மக்களது பிரச்சினைகளைச் தீர்க்க ஜனாதிபதிக் கமிஷன் நியமிக்கப்பட்டது. எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை விசாரிக்க ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன ஆகவே இவைகள் கூட்டணியின் சாதனைகள் அல்லவா? தமிழ் ஈழ விடுதலைப்பயணத்தைக் கைவிட்டுவிட்டதாக எம். பிக்கள் யாராவது கூறினார்களா? அப்படிக் கூறினால் அணுகுமுறையில் தவறு என்று கூறலாம்.

கூட்டணியை நம்பி, அதன் தலைவர்களை நம்பி அவர்களிடம் விடுதலைப்பொறுப்பை ஒப்படைத்துவிட்ட பின் நாம் சரி, பிழை கதைக்கமுடியாது அவர்கள் சரியான பாதையில் செல்வார்கள் என்று நம்பிக்கை வைத்து செயல்பட வேண்டும்.

தக்கதருணம், மாற்றான் வலிமை, தன்வலிமை யாவற்றையும் கருத்தில் கொண்டு தமிழ்ஈழ இலட்சியம் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியதேதவிர சேகுவரா இயக்கத்திற்கு நடந்ததுபோன்ற கதி ஏற்பட வழிவகுக்கக்கூடாது."

### வண்ணை ஆனந்தன் வாதம்

வண்ணை ஆனந்தன் கூறியதாவது: தமிழ் ஈழ தேசிய மன்றம் தக்க தருணத்தில் அமைக்கப்படும் என்றே கூட்டணி கூறியது "முழுமையான ஸ்திரப்பாடு ஏற்படாத வரை இம்மன்றத்தை நிறுவுவது இயலாது என்பதை நாம் உணரவேண்டும். பாராளுமன்றம் செல்லாது விடுதலைப் போராட்டம் நடத்தும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் துப்பாக்கி ஏந்தத் தயாராயுள்ளனர் ஆனால் அஹிம்சையில் நம்பிக்கை கொண்ட நாம் எவ்வாறு அவ்வழிகளை நாட முடியும்?

### மதிமுகராசா வாதம்

பொன் மதிமுகராசா கூறியதாவது: கூட்டணியின்மேல் குறைசொல்வதை விடுத்து சரியான நேரம்வரும்போது தீவிரமாக செயல்படும் அவர்களுக்கு துணைநிற்கவேண்டும்.

## வழக்காடு மன்றம்

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய அணுகுமுறைகள் தமிழ் ஈழ விடுதலையைப் பின்தள்ளுகின்றன" என்ற தலைப்பில் அண்மையில் கட்டுவன் தெற்கு பாரதி சனசமூக நிலையம் "வழக்காடு மன்றம்" ஒன்றை நிகழ்த்தியது. இவ்வழக்காடு மன்றத்திற்கு யாழ்ப்பாணம் தேவன் ஆசிரியர் தலைமைவகித்தார்.

### 'தேவனின் தீர்ப்பு'

இறுதியில் நீதிபதி தேவன் ஆசிரியர் தீர்ப்பளிக்கையில் கூறியதாவது:-

இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்களின்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அணுகுமுறைகள் தமிழ் ஈழ விடுதலையை பின்தள்ளச் செய்துள்ளன என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. 77 தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற கூட்டணியினர் கடந்த 3 வருடமாக எதுவும் செய்யவில்லை. அவர்களது விடுதலைப்பாதை ஸ்தம்பித நிலை அடைந்துள்ளது. (இ)

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய அணுகு முறைகள் தமிழ் ஈழ விடுதலையைப் பின்தள்ளுகின்றன" என்ற கருத்துக்கு ஆதரவாக திரு ஈழவேந்தன், மாவை சேனாதிராசா, கோவை மகேசன் ஆகியோர் இம்மன்றத்தில் வாதாடினர்.

## 77 தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது

திரு. கோவை மகேசன் தமது வாதத்தில் கூறியதாவது:

"1977ம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர் தமிழ் ஈழத் தேசிய மன்றம் அமைத்துத் தமிழ் ஈழ விடுதலைக்கு உழைப்பதாகக் கூறியவர்கள் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்திற்குச் சென்று ஸ்ரீலங்கா பாராளுமன்றமே எல்லாம் என்ற நிலைக்கு இன்று வந்துள்ளனர். விடுதலைக் குரலை உலக அரங்கில் எடுத்துரைக்கப் பாராளுமன்றத்தை ஒரு மேடையாகப் பயன்படுத்தப்போவதாகக் கூறியவர்கள் அங்கு சென்று ஆட்சியாளர்கள் கொண்டுவரும் சட்டங்கள், வரவு-செலவுத் திட்டங்கள் மீதெல்லாம் தமது கருத்தை வெளியிட்டு அவர்களுக்கு உதவிசெய்வதுடன், அவர்கள் இந்த நாட்டின் நிர்வாகத்தைச் சிறப்பாகவும், அதே நேரத்தில் தமிழ்மக்களை அடிமைகளாகவும் நடத்துவதற்குத் தமது அறிவு அவர்களுக்குப் பயன்படும்விதத்தில் நடக்கிறார்கள்.

"பாலஸ்தீன விடுதலை இயக்கம் எந்தப் பாராளுமன்றத்திற்கும் செல்லாது பெரிதும் வளர்ச்சிபெற்று இன்று உலக அனுதாபத்தைக்கூட பெற்றுவருகிறதென்றால் நாம் ஏன் அப்படிச் செய்யமுடியாது? பிலிப்பைன்ஸ், ஸ்பெயின் நாட்டு விடுதலைப் போராட்டங்களின் போதும் அவர்கள் பாராளுமன்றம் செல்லாமலேயே போராட்டம் நடத்தினர்.

"இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தற்செயலாகவே நமக்கு கிடைத்ததென்றும், விசுவாசமற்ற எதிர்க்கட்சித் தலைவராகவே இருப்பேனென்றும் கூறிய திரு. அ. அமிர்தலிங்கத்தின் அந்த நிலையில் இன்று ஆட்டம் கண்டுவருவது கவலைக்குரியது. பிரதமரும், அவரும் சேர்ந்து விடுத்த அறிக்கையொன்றில் எமது பிரச்னைகளைப் பேசித் தீர்ப்போம் என அவர் தெரிவித்தன் மூலம் தமிழ் ஈழ விடுதலை எவ்வளவு தூரம் பின்தள்ளப்பட்டுள்ளது என்பதை அவர் உணராதிருப்பது வேதனை தருகிறது. இவ்வறிக்கையை உலக நாடுகளுக்கு அரசாங்கம் காட்டுவதால், உலக நாடுகளில் உள்ள எமக்கு ஆதரவான இயக்கங்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன.

பாராளுமன்றத்தில் கூட்டணித் தலைவர்கள் பேசும்போது (திரு. கதிரவேலுப்பிள்ளை தவிர்ந்த) எமது நாடு என்று குறிப்பிடுகிறார்கள் தமிழினம் சிறுபான்மை இனம் என்கிறார்கள். இது முற்றிலும் தவறுமட்டுமல்ல எமது நிலையை நாமாகவே குறைக்கின்றோம். இது இரு நாடுகளைக்கொண்ட ஒரு தீவு, என்பதையும் தமிழினம் ஒரு தேசிய இனம் என்பதையும் இவர்கள் வலியுறுத்தாதிருக்கிறார்கள்.

கூட்டணியின் இன்றைய போக்கு விடுதலை இயக்கம் போன்று செயல்படுகிறதா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. விடுதலைக்காகவே மக்கள் கூட்டணிக்கு வாக்களித்தனர். ஆனால் கூட்டணியினர் இன்று அபிவிருத்தி பற்றியும், அதற்காக மந்திரிமாரை சந்திப்பதிலும் தான் ஈடுபடுகிறார்கள். மக்கள் அபிவிருத்திக்காக வாக்களிக்கவில்லை என்பதை அவர்கள் உணரவேண்டும்.

### ஈழவேந்தன் கருத்து

திரு. ஈழவேந்தன் கூறியதாவது:

திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன பெரிய இராஜதந்திரி என்றும், நாம் பலவீனமாகவுள்ளோம் என்றும் கூறி வருவதால் எமது விடுதலை எப்போது கிடைக்கும் என் நம்பமுடியாதுள்ளது ஆபத்துஎன்று கூறிக்கொண்டிருப்பதை விடுத்து அதற்கான மார்க்கம் என்ன என்பதை திட்டமிட்டுச் செயல்படாது இருப்பது மக்களை ஏமாற்றுவது போலாகும், மக்கள் தயாராகவில்லை என்று கூறுவது வீண் விதண்டாவாதமாகும். மக்களைத் தயார் செய்வது தலைமையின் பொறுப்பே என்பதை அவர்கள் உணரவேண்டும்.

வெளிநாடுகளில் தமிழ் ஈழ விடுதலை பிரசாரம் தீவிரமடைவதற்கு வெளிநாட்டு இளைஞர்கள் காரணமே தவிர கூட்டணியினர் அல்ல.

### மாவை சேனாதிராசா வாதம்

மாவை சேனாதிராசா கூறியதாவது:

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களை ஏமாற்றி விட்டது, தமிழ் ஈழ விடுதலையை நோக்கமாகக்கொண்ட இவர்கள் உத்தியோகம், இடமாற்றம், அபிவிருத்தி போன்றவற்றில் ஈடுபடுவது விநோதமாயுள்ளது (மாவிட்ட.நி.)

## கத்தோலிக்க ஆசிரியரின் எழுச்சி மாநாடு

(புலோலி)

யாழ், மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரிய சங்க எழுச்சி மாநாடு மேமாதம் 10-ம் திகதி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் சங்கத்தலைவர் திரு. ஆர். யோசவ் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மறை ஆயர் பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இம் மகாநாட்டையொட்டி சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது. (சு)

## 'கல்வி கற்றவர் வேலை தேடி அலையும்நிலை இன்று இல்லை'
### வட்டுக்கோட்டை எம். பி. மகிழ்ச்சி

(சுழிபுரம்)

'கல்வியைக் கற்றவர்கள் அன்று வேலையைப் பெற எங்கும் தேடி அலைந்தும் கல்விக்குரிய வேலையைப் பெற்றுக் கொள்ள முடிந்தது இன்று அப்படி அல்ல. கல்வியைக் கற்ற ஒருவன் எப்படியும்தமது வாழ்வை வளம் படுத்துக தொழிலைச் செய்யக்கூடிய வாய்ப்பு இன்று கண்டிப்பாக உள்ளது.'

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு தா. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத் தொகுதி வட்டாரப் பாடசாலைகளின் கலை, விஞ்ஞானம், கைத்தொழிற்துலைப் பொருட்காட்சியை திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ப சண்முகராசா தலைமையில் நடைபெற்ற இப் பொருட்காட்சியில் சிறப்பு விருந்தினராக வட வாநிலக் கல்வி அதிகாரி திரு.க. நவரட்னம் கலந்து கொண்டார்.

"திரு .தா. திருநாவுக்கரசு மேலும் பேசுகையில்" ஒரு நிலையான கல்வி அமைந்பு இல்லாது இருந்தாலும் இன்று தொழில்முயற்சிக்குமுன்னிடம் கொடுக்கும் கல்வி அமைந்துள்ளதால் இக் கல்வி முறையை வரவேற்றுப்பயன்பெறுவோம் அரசாங்க உத்தியோக மோகமும் இதனால்குறைந்து போகின்றது. உத்தியோகத்திற்கு உரிய கல்வி போய் வாழ்க்கைக்குரிய கல்வியின் பயனை எமது பிள்ளைகள் பெற்றுக் கொள்ளவும் பெற்றோர்கள் அறிந்து கொள்ளவும் வாய்ப்பாக இப் பொருட்காட்சி அமைவதால் இதை யாவரும் பயன் படுத்த வேண்டியது எல்லோருடைய கடமையாகும் என்றார். (கு)

## யாருடைய அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூரைச் சேர்ந்த பாலசந்திரா ஜெகநாதன், அளவெட்டி வடக்கைச் சேர்ந்த விநாயகலிங்கம் சௌந்தரராசன் ஆகியோரது அடையாள அட்டைகள் வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலயத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளவும்.

## கி. அ. சங்கங்கள் புனரமைப்பு

(புளியங்குளம்)

வவனியா வடக்கு நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருக்கும் சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களும் புனரமைப்புச் செய்யப் படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளைக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வி. குமாரசிங்கம் மேற்கொண்டுவருகிறார் (கு)

## குளங்கள் புனரமைப்பு

(புளியங்குளம்)

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள சகல பாழடைந்த குளங்களையும் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்ய வவனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசுந்தரம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார். (கு)

## கலை விழா

(நெல்லியடி)

நெல்லியடி அம்பலத்தாடிகள் நடாத்தும் புதுவருடக் கலைவிழா ஆம் மாதம் 13ம் திகதி மாலை நெல்லியடி காளி கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

தாசீஸியசின் 'பொறுத்தது போதும்' 'கூடி விளையாடு பாப்பா' ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்படும். [சு]

## இடமாற்றம்

(புளியங்குளம்)

ஊஞ்சால்கட்டி கனிஷ்ட வித்தியாலயம் மருதோடைக்கு மாற்றப்பட்டுள்ளது.

வவனியா எம் பி. திரு. தா. சிவசிதம்பரத்திடம் மருதோடைப் பகுதி மக்களினால் விடுக்கப்பட்டவேண்டுகோளுக்கிணங்க வவனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. எம். சிமியாம்பிள்ளை கல்வி அமைச்சின் அனுமதியுடன் ஊஞ்சால்கட்டி கனிஷ்ட வித்தியாலயத்தை மருதோடைக்கு மாற்றியுள்ளார். இதுவரை பெயர்மாற்றம் செய்யப்படவில்லை. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அமிரின்' நாடகமண்டப....

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதற்குச் சான்றாக இன்னுமொரு சரித்திர சம்பவத்தைத் திரிபுபடுத்துகிறார் திரு. அமிர்தலிங்கம். பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தத்தை தான் எதிர்த்ததாகவும், அது தவறு என்று இப்போது உணருவதாகவும் கூறுகிறார். அந்த ஒப்பந்தத்திற்கு மாறான அபிப்பிராயம் அவர் கொண்டிருந்ததை இதுவரையில் எனக்குத் தெரியாது ஒருவேளை மனதில் வைத்திருந்தாரோ இல்லையோ தெரியாது. ஆனால் வெளியிட்டதையோ கட்சிக்குள் தெரிவித்ததையோ நான் அறியமாட்டேன். மாறாக, அந்த ஒப்பந்தம் நிறைவேறி இரண்டு நாட்களுக்குப்பின், 1957 ம் ஆண்டு ஜூலை மாசம் என்று நினைக்கிறேன். மட்டக்களப்பில் நடந்த கட்சி மகாநாட்டிலே ஒப்பந்தத்தின் வெற்றியைப் பற்றி சங்கநாதம் செய்தவர்களில் முன்னணியில் நின்றவர் திரு. அமிர்தலிங்கம். அதையடுத்து இரண்டொரு மாசத்தில் இங்கிலாந்து சென்றவர் அங்கேயும் அப்படித்தான் செய்தார் என்பது எனது ஞாபகம். அந்த ஒப்பந்தத்தை முழுமூச்சாக எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும் பிரசாரமும் செய்துவந்தவர்கள் சிங்களப்பகுதிகளிலே திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் தமிழ்ப் பகுதிகளிலே திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அதை நிறைவேற்றும்படி கட்சி வற்புறுத்திக்கொண்டிருக்க, அதை எப்போது நிராகரிக்கலாம் என்று தருணம் பார்த்துக் கொண்டிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் தான் திரு. அமிர்தலிங்கம். கட்சியின் மேலிடத்தை மேவாமல், செயற்குழுவே விஷயத்தைப்பற்றி ஆராயாமல் இருந்த நிலையிலே, யாழ்ப்பாணம் பெரியகடை பஸ் நிலையத்தில் சிங்கள ஸ்ரீ பொறித்த பஸ் வண்டி வந்து நின்றதும் பிற்காலத்தில் கட்சிக் கட்டுப்பாடு பேசும் அமிர்தலிங்கம் ஓடோடியும் போய் தார் பூசி கிளர்ச்சியைத் தொடங்கி வைத்தார். உடனே கொழும்பிலே திரு. பண்டாரநாயக்க ஒரு கூட்டத்த பிக்குகளைக் கூட்டி, தமிழரசுக் கட்சி ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது என்பதைச் சாக்குச் சொல்லி ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்தார். பின்பு கட்சி அதை ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டமாக நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதைத்தான் தான் செய்த தவறு என்று திரு. அமிர்தலிங்கம் இப்போது அரசியல் முதிர்ச்சியடைந்த வயசில் உணருகின்றனரென்றால் அது வரவேற்கத்தக்கது. இதுகளை உணர்ந்து இளைஞர்கள் அரசியலைசரியாகப் படிக்க வேண்டும் என்று உபதேசம் செய்கிறார். இளைஞர்களும் அதைக் கேட்கவேண்டிய நிலையில்தானே இருக்கிறார்கள். சிவபெருமானைப் பார்ப்பதற்காக மகாவிஷ்ணு கருடன் மீதேறி கயிலாயத்துக்குப் போனாராம். அப்போது சிவபெருமான் திருமுடிமேல் வீற்றிருந்த நாகபாம்பு கருடனைப் பார்த்து "கருடா சௌக்கியமா?" என்று கேட்டதாம். அதற்கு கருடன் "இருக்கும் இடத்தில் இருந்தால் எல்லாம் சௌக்கியமே" என்று விடையளித்ததாம். இளைஞர்கள் அரசியலைச் சரியாகப் படிக்க வேண்டுந்தான். ஆனால் அதை திரு. அமிர்தலிங்கத்திடம் படிக்காமல் இருக்கும்வரையில் சரி. ஏன் என்று சொல்லுகிறேன்.

தமிழில் ஒரு நாடோடிப் பாடல் உண்டு,

"கல்லுளி மங்கன் போனவழி
கல்லுகள் எல்லாம் தவிடு
பொடி"

என்று

இதைப் போன்றதுதான் திரு. அமிர்தலிங்கத்தின் அரசியல்.

## வடக்கு கிழக்கு ஒற்றுமை

- என்றுமில்லாத வகையில் வடக்கு மாகாணத்தையும் கிழக்குமாகாணத்தையும் இணைத்து ஐக்கியப்படுத்தி வைத்திருந்தார் திரு. செல்வநாயகம். இதைத் தகர்த்து எறிந்தார் திரு. அமிர்தலிங்கம்.
- அல்லை கந்தளாய் குடியேற்றங்களில் அரும்பாடுபட்டு தமிழர்களுக்காகக் காப்பாற்றி வைத்திருந்தார்கள் அமரர்களான கோப்பாய் வன்னியசிங்கமும், திரிகோணமலை இராஜவரோதயமும் இதை வெள்ளித் தாம்பாளத்தில் வைத்து தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார் திரு. அமிர்தலிங்கம்.
- குமாரசூரியர் தப்பையா முன்னிலையிலும் தொகுதி நிர்ணய சபை முன்னிலையிலும் திறம்படவாதாடி திருக்கோணமலை மாவட்டத்தில் இரண்டு தமிழ் எம். பி க்கள் இருக்கக் கூடியமுறையில் தமிழர்களுக்காக இரண்டு தொகுதிகளை அமைத்திருந்தார். வன்னியசிங்கம். சேருவில தொகுதியை சிங்களவர்களுக்காக அமைக்கும்படி தாமகவே கேட்டு இவற்றை ஒன்று ஆகக் குறைத்தார் திரு அமிர்தலிங்கம்.
- கடைசியாக, எந்தக் கட்சியின் பாசறையிலே வளர்ந்து அரசியல் வாழ்க்கையில் உயர்ந்தாரோ அதற்கே மூடுவிழா நடத்திவிட்டார், திரு அமிர்தலிங்கம் இப்படியான அரசியலை இளைஞர்கள் படிக்காமல் இருப்பது நல்லது.

திரு அமிர்தலிங்கத்தின் பாஷையிலே, எனக்குப் 'பின்னாலே சென்ற இளைஞர்கள் பலர்' சுதந்திரக் கட்சியிலும் ஐக்கிய தேசியக் கட்சியிலும் சேர்ந்துள்ளனர் என்று கூறுகிறார். யாரைக் குறிப்பிடுகிறாரோ எனக்குத் தெரியவில்லை. சுயாட்சிக்கழகத்துக்குப் பின்னாலே பதினாயிரத்துக்கும் அதிகமானோர் நிற்கிறார்கள். இவர்கள் எல்லோரும் தமிழரசுக் கொள்கைகளிலே ஊறியவர்கள். தமிழரசுக்கட்சிதான் தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற மறுபெயரில் இயங்கும் இயக்கம் என்றுகருதுபவர்கள். அமிர்தலிங்கம்அணியினர் நூற்றுக்கணக்கானோர் அமைச்சர் தொண்டமான் காரியாலயவாசலிலும், அமைச்சர் இராசதுரை காரியாலயத்தின் வாசலிலும் தவம் கிடப்பதைப் போலல்லாது, சுயாட்சிக் கழகத்தினர் யாராவது ஆட்சியாளரிடம் நீதி வழங்கும்படி கேட்கப் போயிருக்கலாம். தமிழ் ஈழம் அமைந்து, திரு. கா. பொ இரத்தினம், திரு. அமிர்தலிங்கம் போன்றவர்களால் தமிழராட்சி நடத்தப்படுமானால் அது எப்படி இருக்கும் என்னவிதமான நீதிவழங்கப்படும் என்பதை இவர்கள் தொகுதிகளில் காணக்கூடியதாக இருக்கிறது. இவர்களின் அநீதியையும் கெடுபிடிகளையும் தாங்கமுடியாமல் திரு. தொண்டமானிடமோ, திரு. இராசதுரையிடமோ அல்லது வேறெந்த ஆட்சியாளரிடமோ முறையிட்டு நீதிவழங்கும்படி கோருவதில் எந்தவிதமான தவறும் இல்லை. கொழும்புக்குத் தலையையும் யாழ்ப்பாணத்துக்கு வாலையும் காட்டி நடத்தும் சுயநல விலாங்கு அரசியலிலும் பார்க்க, பகிரங்கமாக ஒளிவுமறைவின்றி ஆளும்கட்சியோடு சேர்ந்து அமைச்சர்கள் தொண்டமான், இராசதுரை போன்றோர் நடத்தும்அரசியல் எவ்வளவோ நேர்மையானது. அந்தந்த மக்களின்வாழ்க்கைப் பளுவைக் குறைக்கவாவது பயன்படும்.

சாதனைகள் பற்றி ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். நவரத்தினத்தால் ஒன்றுமே சாதிக்கமுடியவில்லை என்கிறார் திரு. அமிர்தலிங்கம், எனக்கு [illegible] பொறுப்புத் தந்த மாதிரி. சாதனைகள் புரிந்து தமிழ் மக்களின் விடுதலை காண்போம், வாருங்கள் என்று அமிர்தலிங்கத்திடம் கேட்டேன். மறுத்துவிட்டார். மக்களைப் பார்த்து சந்தர்ப்பம் தாருங்கள் என்று கேட்டேன். கொடுக்காதிர்கள் என்று மறித்துவிட்டார் திரு. அமிர்தலிங்கம். அப்புறம் என்ன? மாறாக, அணிசேர்த்து பாராளுமன்றம் சென்றார் திரு. அமிர்தலிங்கம். மக்கள் கண்டது மேலே சொல்லப்பட்ட தவிடுபொடி சாதனைகளைத்தான். சுதந்திரக்கட்சி அமைத்துவைத்திருந்த அரசமைப்புச் சட்டத்தை எதிர்ப்போம் என்று வீரமுழக்கம் செய்து பாராளுமன்றம் போனார். அங்கே அதை அமுல் நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் முறையிலே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எடுத்துக்கொண்டார். இந்தப் பதவியை ஏன் ஏற்றீர்கள் என்று கேட்டவர்களுக்கு "இந்தப் பதவியில் இருந்தால் தான் இலங்கைத் தமிழர் பிரச்னையை உலகறியச் செய்யலாம்" என்று சமாதானம் கூறினார். தானும் உலகத்தின் பல பாகங்களைச் சுற்றி, தனது அணியினரையும் சுற்றச்செய்து மகத்தான பிரசாரசாதனை புரிந்தார். கண்ட பலன் அரசாங்கத்தோடு சேர்ந்து நடவுங்கள் என்று புத்திமதி சொல்லி எழுதிய 'கல்கி' தலையங்கம் தான். அதை ஏற்றுக்கொண்டதும் பெரிய சாதனையல்லவா?

---

## 'கடமையுணர்வு இருக்கவேண்டும்'

(அரியாலை)

சேவை மனப்பான்மையும் கடமையுணர்வும் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டும். ஆசிரியர் சேவையை பலர் மேற்கொண்டாலும் ஒரு சிலரே இச்சேவையால் சிறப்படைகின்றனர்'

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரியில் இருபதுவருடங்களுக்கு மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்து நைஜீரியாவில் ஆசிரியர் நியமனம் பெற்றுச் செல்லும் ஆசிரியர் ரி. தவராஜலிங்கத்தின் சேவையைப் பாராட்டி நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டத்தில் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "பௌதிகவியல் பாடத்தை, திரு. தவராஜலிங்கம் சிறந்தமுறையில் போதித்தமையால் மாணவர்கள் அநேகர் இப்பாடத்தில் கடந்த பல வருடங்களாக சிறப்புச்சித்தி பெற்றனர். இதனால் கல்லூரியின் கல்வித்தரமும் உயர்ந்தது. பாடசாலையின் சகல வைபவங்களிலும் சிறந்த பங்காளராகப் பணிபுரிந்ததுடன் மாணவர்களிடையே சேவை மனப்பான்மையையும் ஒழுக்கத்தையும் போதித்த சிறந்த ஆசிரியனாயும் பணிபுரிந்தார்" என்றார். (ந)

---

## வங்கி...

[illegible] தூதுகோஷ்டியினர் இப்பேச்சுவார்த்தையின்போது எடுத்துக் கூறினார்கள். இவ்வங்கிக் கிளையை மீண்டும் திறப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், விரைவில் திறந்து வைக்கப்படும் என்றும் பிரதேச முகாமையாளர் தூதுகோஷ்டியினரிடம் உறுதியளித்தார்.

இத்தூதுகோஷ்டியில் மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு, மானிப்பாய்த் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைநாள் வேட்பாளர் திரு. ஆர். எஸ். அலோசியஸ் ஆகியோரும் வர்த்தகர்களின் பிரதிநிதிகள் சிலரும் இடம் பெற்றிருந்தனர். (ஓ)

---

# "ஈழத்து கவிதை வரலாற்றில் புதுவைக்கு தனியிடமுண்டு"

### 'இரத்தபுஷ்பங்கள்' வெளியீட்டுவிழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"கவிஞர் புதுவைரத்தினதுரையின் ஆளுமை வளர்ச்சியினை எடுத்துக் காட்டும் வகையில் 'இரத்தபுஷ்பங்கள்' நூலில் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன." இந்த புஷ்பங்கள் நூல் வெளியீட்டுவிழா யாழ்ப்பாணத்தில் [illegible] பெற்றபோது தலைமையுரையாற்றிய [illegible] சண்முகதாஸ் குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து பேசுகையில், "கவிஞன் என்ற வகையில் அவனுடைய வரலாற்றை எடுத்துக் காட்டுவதால் இத்தொகுதி முக்கியத்துவம் பெறுகிறது. ஈழத்து கவிதை வரலாற்றில் புதுவை இரத்தினதுரைக்குத் தனியானதோர் இடமுண்டு. கவிஞனுடைய மனவளர்ச்சி அது எத்தகையதாக அமைந்தபோதும் விமர்சிக்கவேண்டும். இரத்தபுஷ்பங்கள் வெளிவந்துள்ள இவ்வேளை அதற்கான சிறந்த தருணமாகும்" என்றார்.

முதற் பிரதி பெற்று உரையாற்றிய சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் "தமது படைப்புக்களை வெளியிடவே எழுத்தாளர்கள் மிகுந்த சிரமப்படும் இவ்வேளை படைப்பாளியான ஜெகநாதனே தனது எழுத்தாளநண்பரின் நூலை வெளியிட்டது பாராட்டப்படவேண்டிய முன்மாதிரியாகும்" என்றார்.

காரைநகர் எஸ். ஜெகநாதன் தனது வெளியீட்டுரையில் "ஈழத்து இலக்கியத்துறையின் இளைய தலைமுறையினரை அறிமுகம் செய்து எழுதிவருவதால் புதிய தலைமுறையினரின் ஆற்றல்களோடு நெருக்கமான பரிச்சயம் பெற்றிருக்கிறேன். நண்பர் புதுவையைப் பற்றிஎழுதுவதற்காக அவரது ஆக்கங்களை சேகரித்துப் படித்தபோது அவற்றை தொகுத்து வெளியிடவேண்டியது எனது இலக்கியக் கடமை என்பதை உணர்ந்தேன். இதனைத் தொடர்ந்து இன்னும் பலரது நூல்களையும் வெளியிடுவேன். தமது ஆக்கங்களை வெளியிடவதிலேயே முனைப்பாயிருந்த சுயநலத்தன் செயற்படாமல் குடும்பபாசத்தின் உணர்வுடன் எழுத்தாளர்கள் இயங்கவேண்டும்" என்றார்.

திரு. நா சுப்பிரமணியம் தனது உரையின்போது முப்பது வருட கால வரலாற்றிலே படைப்பாளிகள் இனப்பிரச்னையை ஏனோ தட்டிவிட்டுப் போனார்கள் படைப்பாளிகளிடம் கருத்து மாற்றம் ஏற்பட்டாலும் கூட அவர்கள் தமது படைப்புகளை ஒரு தத்துவார்த்தப் பின்னணியுடன் எழுதவேண்டும்" என்றார்.

திரு. சோலைமகேசன் பேசுகையில், "எழுத்தாளர்கள் சமூகத்துக்கு வெளியே நின்று இலக்கியம் படைக்காமல் சமூகத்துடன் ஒன்றி அவர்களது மன உணர்வுகளைப் புரிந்து இலக்கியம் படைக்க வேண்டும். புதுவையின் கவிதைகளுக்கு ஆரம்பமுதலே இடமளித்து சுதந்திரன் ஊக்கமளித்தது" என்றார்.

திரு. கணபதி கணேசன் நன்றியுரை கூறினார். (கு)

---

# "தந்தை செல்வாவின் பெயரை கட்டிவளர்க்க வேண்டும்'

### ஆசிரியர்களிடம் 'அமிர்' கோரிக்கை

[மாவிட்டபுரம்]

"தந்தை செல்வா இமயம் போல் உயர்ந்த ஓர் உத்தம தலைவர். அவரது பண்பு, நேர்மை, தியாகம் எல்லோருக்கும் வந்துவிடப் போவதில்லை. தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட தந்தை செல்வாபோல் மேலும் பல தந்தை செல்வாக்களை இந்த வித்தியாலயம் உருவாக்கித்தர வேண்டும்".

இவ்வாறு தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கப்பள்ளிக்கு அப்பெயரைச் சூட்டிவைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன்துறை எம். பி. யுமான திரு அ. அமிர்தலிங்கம் கூறினார்.

அதிபர் திரு. சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:

"இவ் வித்தியாலயத்திற்கு தந்தை செல்வாவின் பெயரை இட்டதால் இவ்வித்தியாலயம் சிறப்புப்பெறுகிறது அவர் பெயருடன் விளங்கும் இவ் வித்தியாலயம் இப்பகுதியிலேயே முன்னோடியாக விளங்க வேண்டும் அவரது பெயருக்கு இழுக்கு ஏற்படாத விதத்தில் இதனைக்கட்டிவளர்க்கவேண்டியது ஆசிரியர்களது கடமையாகும்" என்றார்.

வட்டார வித்தியாதரிசி திரு.பொ. சிவஞானசுந்தரம், யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர் திரு ஐ.பி.துரைரத்தினம், வடமாநிலகல்விப்பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகர் ஆகியோரும்பேசினர். [கு]

---

இரணைதீவு கொலை வழக்கு

# நீதிமன்றம் வராத எதிரிக்கு வாரண்ட்

[யாழ்ப்பாணம்]

இரணைதீவுக் கொலைவழக்கில் நீதிமன்றம் வராத எதிரிக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். சாமீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 77 நவம்பர் 10ம் திகதி இரணைதீவில், மாயன் மார்சலின் என்பவர் அந்தோனி நீக்கிலன் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம் ஆஜரானார். அரச தரப்பில் ஆர். தவராசா ஆஜரானார்.

விசாரணை ஜூலை மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [க]

---

## திரிமலை...

(-2ம் பக்கத் தொடர்ச்சி)

குட்டி, இணைக்காரியதரிசிகள்: சட்டத்தரணி வி எஸ் கணேசலிங்கம், இராஜ சண்முகரத்தினம், தனதிகாரி: என். பொன்ராஜன் நிர்வாகசபையொன்றும் தெரிவானது. (கு)

---

## அரசின் நல்ல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற அதிகாரச் சட்டத்தின் கீழ் ஊழியர் மன்றங்கள் அமைக்கப்பட்டமைக்கு எதிரான சிலர், கூட்டத்தில் பங்குபற்றாது சில உறுப்பினர்கள் தவறான வழியில் இட்டுச்செல்லப்படுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம். ஆயினும் திட்டமிட்டபடி கூட்டம் நடைபெற்று நீண்ட நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றது. தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ள ஊழியர்பேரவைகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் ஏனையோர் பின்பற்றத்தக்க மாதிரியாக விளங்கி அமைதியாகச் செயல்படுவதற்கு உதவும்விதத்தில் முகாமையுடன் பிரச்னைகளைக் கையாளும்விதம்பற்றி உறுப்பினர்களுக்கு மதியுரை வழங்கப்பட்டது" (கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க. மொழிக் கொள்கை என்றுமே பிறளாது

## கருணாநிதி உறுதி

மதுரை, ஏப். 7

"திராவிட முன்னேற்ற கழகத்தின் மொழிக் கொள்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிறளமாட்டாது".

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறினார் மதுரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மொழிக்கொள்கை மட்டுமல்ல அமரர் அண்ணாதுரையினால் மத்திய அரசின் முன்வைக்கப்பட்ட தி. மு. க.வின் அடிப்படை இலட்சியமான மாநில சுயாட்சிக் கொள்கையையும் தி. மு. க. என்றுமே முற்றாகக் கைவிடமாட்டாதென்றும் திரு. கருணாநிதி கூறினார். (இ)

# இந்திரா அரசின் ஆக்கபூர்வ நடவடிக்கைகளுக்கு ஆதரவு

## பாரதிய ஜனதா தலைவர் கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 7

புதிதாக உருவாக்கப்பட்ட பாரதிய ஜனதாகட்சி ஐக்கிய பாரதத்திற்காக உழைக்கும் அதே வேளையில் அதிகாரங்களைப் பரவலாக்கும் நடவடிக்கைகளுக்கு, முழு ஆதரவுஅளிக்கும்.

இவ்வாறு அக்கட்சியின் தலைவர் திரு. பி. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற இக்கட்சியின் முதலாவது பேரணியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது:

திருமதி இந்திராகாந்தி அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் முற்போக்குத் திட்டங்களையும் பாரதிய ஜனதா கட்சி ஆதரிக்கும் அதேவேளையில், ஜனநாயக விரோதநடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நேரத்தில் குரல் கொடுக்கத் தயங்காது

ஜனதாகட்சிக்குள் தோன்றியுள்ள உட்பூசலும் வீண் சண்டைகளுமே கட்சியைப் பிளவுபடுத்திவிட்டது. (இ)

# "கிராமங்களிடையே கல்வி மறுமலர்ச்சி வேண்டும்"

--வடமாநிலக் கல்வி அதிபதி

(பளை)

"நாட்டின் முன்னேற்றத்திற்கு கிராமங்களிடையேகல்வி மறுமலர்ச்சி ஏற்படவேண்டும் இந் நோக்கத்திற்காகத்தான் இப்பாடசாலையை ஆரம்பித்து வைக்கிறேன்."

முள்ளியானிலுள்ள கேவில் என்னும் இடத்தில் அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலையைப் புதிதாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வைபவத்திற்கு பருத்தித்துறை கல்வி அதிகாரி திரு. துரைச்சாமி தலைமை தாங்கினார். அவர்மேலும் பேசுகையில் "கிராமத்தின் முன்னேற்றத்திற்கு அங்கு வாழ்கின்ற மக்களின் ஒற்றுமை இன்றியமையாததாகும். கிராமத்தின் மக்கள் சாதியின் பேராலோ சமயத்தின் பேராலோ பிளவுபட்டிருக்கக் கூடாது என்னால் ஆரம்பித்து வைக்கப்படுகின்ற இப் புதிய பாடசாலை இக் கிராமத்தின் வளர்ச்சியில் பங்கெடுத்து எதிர் காலத்தில் சிறந்த கல்வி மான்களைத் தோற்றுவிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

பாடசாலையின் தற்காலிக அதிபர். திரு பி. பாக்கியநாதன் நன்றி கூறினார். (கு)

## ரூபா 3 லட்சம்பெறுமதி கடலட்டை ஏற்றுமதி

(பண்டத்தரிப்பு)

இவ்வருடம் புதிதாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட மாளிப்பாய்த் தொகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கம் கடந்த இருமாத காலத்தில் மூன்று இலட்சம் ரூபா பெறுமதி மிக்க கடலட்டைகளையும் சங்குகளையும்வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

# குமரி அனந்தனின் கட்சிக்கு அங்கீகாரம்

சென்னை, ஏப். 7

காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ்கட்சி பிராந்தியக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த லோகசபைத்தேர்தலில் இக்கட்சிக்குக் கிடைத்த வாக்குகளின் அடிப்படையிலேயே தமது கட்சி அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் திரு. குமரி அனந்தன் கூறினார்.

நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத்தேர்தலில் அ. தி. மு. க வுடன்இணைந்து போட்டியிடுவதற்கான தொகுதி உடன்பாடுகள் குறித்து அ.தி.மு.க. தலைவர்களுடன் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும்-

காந்திகாமராஜ் தேசியகட்சியின் செயலாளர் திருமதி இந்திரகுமாரிகட்சியிலிருந்துவெளியேற்றப்பட்டுள்ளார் என்றும் திரு. அனந்தன் குறிப்பிட்டார். (இ)

## கோப்பாய் கொலை முயற்சிவழக்கு:

# விசாரணை நடுவில் எதிரி விடுதலை!

## ஜூரிசபையினர் பிரிந்து நின்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கொலைமுயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். விசாரணையின் பின், ஜூரி சபையினர் 5-2 ஆகப் பிரிந்து எதிரி நிரபராதியெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதி மன்றத்தில், நீதிபதி ஜனாப் எம் ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கை 79ம் ஆண்டு ஜனவரி 6ம் தேதி கோப்பாயில் ராமுப்பிள்ளை பரராஜசிங்கம் என்பவர் கனகலிங்கம் இராசசேகரத்தை குத்திக்கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன், வி ஏ. பாலசிங்கம், செல்வி மாலினி ராசரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா வழக்கைநடத்தினார். [க-கு]

## பழைய மாணவர் தினம்

(பலாலி)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் தினமும், வருடாந்த விழாவும் இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை காலை கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரி அதிபர் திரு. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா, சட்டத்தரணி திரு.ஆர் ஜே. செல்வரத்தினம் உட்பட பழைய மாணவர்கள் பலர் வறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வா.

காலை உள்ளகப் பொழுதுபோக்கு விளையாட்டைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை நிகழ்த்துவர் [ஈ]




# மன்னார் செய்திகள்

## இனம் தெரியாத வாகனம் மோதியவர் ஆஸ்பத்திரியில் மரணம்?

மன்னார்- நாவற்குளம் வீதியில் சென்ற பாதசாரி ஒருவர் இனம் தெரியாத வாகனம் ஒன்றினால் மோதுண்டு படுகாயமடைந்தார். பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார் மோதிய வாகனம் மாயமாக மறைந்துவிட்டது.

மன்னார் - நாவற்குளம் வீதியில்வந்தவேறொருவாகனத்தில் காயமடைந்தவர் மன்னார்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில்மரணமானார். மோதிய இனந்தெரியாத வாகனத்தை மன்னார் பொலிசார் தேடிவருகின்றனர்.

### அமைச்சருக்கு பாராட்டு

அண்மையில் மன்னாருக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்த போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமது கொழும்பு - தலைமன்னார் ரயிலில் தரமான பெட்டிகள் உடனடியாக இணைக்கப்படுமென்று கூறினார்.

போக்குவரத்து அமைச்சர் கூறியபடி தற்போது கொழும்பு -தலைமன்னார் ரயிலில் தரமான பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பெட்டிகளில் சகல வசதிகளும் அடங்கியுள்ளன

இதனைப் பாராட்டி மக்கள் சார்பில் மன்னார் ஐ. தே. கட்சி அமைப்பாளர் ஜனாப் கே. எம். எச். அக்பர் பாராட்டுக் கடிதம் ஒன்றை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்,

### உள்ளங்கியில் கரன்ஸி நோட்டுக்கள்

15 ஆயிரம் ரூபா இந்திய கரன்ஸி நோட்டுக்களை உள்ளங்கியில் வைத்துக் கடத்தி வந்தவர் சுங்க அதிகாரியிடம் சிக்கிக் கொண்டார்.

இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மார்க்கமாக தலைமன்னார் வந்திறங்கியஒருவரின்நடமாட்டத்தில் சந்தேகமடைந்தசுங்க அதிகாரி திரு. குறுப்பு, அவரை சோதனையிட்டபோது அவரது உள்ளங்கியில்100ரூபா நோட்டுக்களாக 15 ஆயிரம் இந்திய கரன்ஸி நோட்டுக்கள் இருப்பதைக்கண்டு பிடித்தார்.

சந்தேகநபரை விசாரணை செய்த சுங்கப் பகுதினர் விசாரணையின் பின் இந்திய கரன்ஸி நோட்டுக்களைப் பறிமுதல் செய்து அபராதமும் விதித்தனர்.

### பிரதி அமைச்சர் விஜயம்

பிரதி விவசாய அமைச்சர் திரு. பண்டார இன்று மன்னாருக்கு விஜயம் செய்வார்

### துறைமுக நிர்மாண வேலைகள்

30லட்சம் ரூபா செலவில் மன்னாரில் மீன்பிடித்துறைமுக நிர்மாணவேலைகள் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

உத்தேசத் துறைமுகத்தில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை படகு திருத்தும் நிலையம் உட்பட பல வேலைகள் நடைபெறுவதற்கான கட்டிடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன

### மழை

பல மாதங்களாக இருந்து வந்த வரட்சியைத் தொடர்ந்து அண்மையில் சில நாட்கள் மன்னார் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

### சமாதான நீதவான்கள்

மன்னாரில் தொழில் செய்து வரும் பிரபல வர்த்தகரான திரு. ரீ. குமாரசாமி மன்னார் நீதிபரிபாலன மாவட்டத்திற்குச் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வெள்ளாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு எஸ். பாலசிங்கம் மன்னார் நீதிபரிபாலன மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். [ச]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ரங்கராவ் - சுந்தரராஜன்
அன்புச் சகோதரர்கள்
(புதிய பிரதி)

வெஸ்லி
(சுளிபுரம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நாகேஷ்
ஹலோபாட்னர்
(புதிய பிரதி)

—LAST FEW D S ONLY—
SANTHI JAFFNA — Phone: 7642.
Daily 10-30 a m, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
"SPECIAL DELIVERY"
ADULTS! ACTION PACKED!! COLOR!!!
Await! "DIAMOND'S"—in color

4th CROWDED WEEK
REGAL JAFFNA Phone: 340
Daily 4 shows
Daily at a m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

வெலிங்டன் Daily 10-30 a. m., 2-15, 4-45, 7-00, & 9-30 p.m
[யாழ்ப்பாணம்]
Horror of Frankenstein
[Strictly for Adults]

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா சிவகுமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இலங்கை - இந்திய - கூட்டுத்தயாரிப்பு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) 10-4-80 வரை மட்டு
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
திருடன் (புதிய பிரதி)

11-4-80 முதல் புத்தாண்டு வெளியீடு
இரத்தத்தின் இரத்தமே (ஈஸ்மன் கலர்)

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
வல்லவன் ஒருவன் (புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

# பொலிஸ்-மக்கள் விளையாட்டு விழா

[பண்டத்தரிப்பு]

சங்கானைப் பொலிஸ் பிரதேச பொதுமக்கள் — பொலிசார் நல்லுறவுச் சங்கம் புது வருடப்பிறப்பை முன்னிட்டு நடாத்தும் விளையாட்டு கலாச்சார நிகழ்ச்சி இம்மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை சங்கானைப் பொலிஸ்நிலையபொறுப்பதிகாரி திரு. எம் எச். பி. பெர்னாண்டோ மேற்கொண்டு வருகின்றார். (கு)

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 26-ந்திகதி
(8-4-80)
செவ்வாய்க்கிழமை

மேடம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்தின் அமைதி தவழும்.

இடபம்: ஆயுதப்படைக்கு இடமுண்டு. எனவே எதிலும் அவதானம் விரும்பத்தக்கது அவசரப்போக்கு அனர்த்தத்துக்கு இடம்அளிக்கலாம் தெய்வநம்பிக்கையுடன் சமயோசித புத்தியும் வேண்டும்.

மிதுனம்: நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்படமுடியும். குடும்ப விவகாரங்களில்பிணைப்புகள் இறுகும். காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். சுகபோகநாள்.

கடகம்: நம்பிக்கை மோசடி நடக்கும். வியாபாரத்துறையில் கஷ்டம் ஏற்படலாம். அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். சிலருக்கு வாத ரோகம் தென்படக் கூடும். உணவு விடயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும்.

சிங்கம்: பரோபகாரசிந்தை மேலிடும் பொதுப்பணி புரிவதில் ஆர்வம் பிறக்கும் மதத்தலைவர் ஒருவர் நல்லாசி வழங்குவார். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையினால் நல்ல பெயரும் கிடைக்கும்.

கன்னி: பயன் தரும் பயணம் இன்று மேற்கொள்ளப்படலாம். பழைய நினைவுகள் தலைதூக்கும் வார்த்தையில் வசீகரமும் வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

துலாம்: கூட்டு விபாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும் கடமையில் ஆர்வம் பிறக்கும் டாக்டர்களுக்குச் செல்வாக்கும் பெருகும். நின்மதியான தினம்.

விருச்சிகம்: அந்த விடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள் நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம்.

தனு: அரசியல் வாதிகளுக்கு இன்று அடி சறுக்கலாம் நான் என்ற அகப்பாவத்தை அடக்கிக் கொள்ளவும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழி அமைக்கும்.

மகரம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம்பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும். தானிய விருத்திக்கும் இடமுண்டு.

கும்பம்: குடும்பக் கவலை தலைதூக்கும் பிதாவழி பிணிக்கும் இடமுண்டு. அன்னியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும் பண விவகாரத்தில் அபிப்பிராயபேதம் உருவாகும். மிகவும் சுமாரான தினம்.

மீனம்: தன்மான வாழ்வுடன் தலைமுடைமை சேருப் தாயின் ஆதரவும் தவறாமல் கிடைக்கும் முயற்சி செய் முன்னேற்றம் உண்டு.

சோதிட கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
K. R. விஜயா
பால்மனம்
(புதிய பிரதி)

வயாவிளான் ச. ச. நி.

# கரபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்கள்

(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தக் கேடய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டத்தின் ஓவர்-கேம் 6 வீரர் போட்டியில் சிறுப்பிட்டி ஜனசக்தி வி. கழக 'ஏ' அணியை எதிர்த்து இடைக்காடு சனசமூக நிலையமும், வண்ணார்பண்ணை வள்ளுவன வி. கழகத்தை எதிர்த்து மயிலிட்டி இழங்கோ வி. கழகமும் மயிலிட்டி பூமகள் வி.கழக 'பீ' யை எதிர்த்து இயக்கச்சி - ஆதவன் வி. கழக 'ஏ' யும் போட்டியிடும். சிறுப்பிட்டி - ஜனசக்தி வி. க. 'பீ' யை எதிர்த்து இயக்கச்சி வி க. 'பீ' யும், குரும்பசிட்டி-கிராம முன்னேற்றச்சங்கத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் வடபிராந்திய போக்குவரத்து சபை வி. க வும் ஏழாலை கலநிதி வி. க.வை எதிர்த்து குளமன்கால் - சென் சேவியர் வி. க.வும் போட்டியிடும்.

ஓவர்-கேம் 4 வீரர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை வி. கழக 'ஏ' யை எதிர்த்து மயிலிட்டி - இளங்கோ வி. கவும வண்ணார் பண்ணை - வள்ளுவன் வி கவை எதிர்த்து இடைக்காடு சனசமூக நிலைய வி, க.வும் யாழ்ப்பாணம் - வட பிராந்திய போக்கு வரத்துச் சபை வி. கழக பீ' யை எதிர்த்து குளமன்கால்- சென் சேவியர் வி. கவும் மயிலிட்டி - பூமகள் வி. கழக 'பீ' யை எதிர்த்து புத்தூர் -நியூ பங்ஸ்றார் வி.கவும் போட்டியிடும்.

தொடர்ந்து இடம்பெறும் செற்-அப் போட்டியில் புன்னாலைக் கட்டுவன் - பிளையிஸ் கிளஸ் வ. கவை எதிர்த்து இடைக்காடு - சனசமூக நிலைய வி. க. போட்டியிடும்.

இப்போட்டிகள் இரவு 7-00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். நிலைய மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டிகள் மின்னொளியில் நடைபெறவிருக்கின்றன. (ச)

கிரிக்கட் போட்டி

# இசுபத்தான - சென்ஜோன்ஸ் வெற்றி தோல்வி இல்லை

(அரியாலை)

கொழும்பு இசுப்பத்தான மத்திய மகாவித்தியாலயத்திற்கும் யாழ் பரி யோவான கல்லூரிக்குமிடையே பரி யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

பரி யோவான் கல்லூரிக் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. டி. எம். இரத்தினராசா, என். வசந்தன், பி. ஜெயக்குமார் ஆகியோர் முறையே 21, 60, 39 ஓட்டங்களைப் பெற்றனர். வி. கதிர்காமநாதன் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களைப் பெற்றார். எம். என். பெர்னாண்டோ 53 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

இசுப்பத்தான மகாவித்தியாலயம் தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 196 ஓட்டங்களைப்பெற்றது கப்டன் ஹரிசா டியாய் 114 ஓட்டங்களைப் பெற்றார். ஈ. ஜே. ஜெபரத்தினம் 51 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளையும், என். வசந்தன் 18 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்சில் பரி. யோவான கல்லூரிக் கோஷ்டி 6 விக்கட்டுகளை இழந்து 171 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தைநிறுத்திக் கொண்டது. டி. எம. இரத்தினராசா 91 ஓட்டங்களையும், ஈ ஜே. ஜெபரத்தினம் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் பெற்றனர். எவ். ஹமீட் 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்சில் இசுபத்தான மகாவித்தியாலயம் 5 விக்கட்டுகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. எச். டியாய் 60 ஓட்டங்களையும். எம். கருணம் வெளியேறாமல் 59 ஓட்டங்களையும் பெற்றனர். ஈ. ஜே, ஜெபரத்தினம் 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

# விளையாட்டுப் போட்டி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விளையாட்டு அமைச்சின் ஆதரவில் நடைபெறும் வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே கோபாலரத்தினம் இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (கு)

# ரூபா 3 லட்சம்..

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

மேலும் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான கடலட்டைகளை சங்க உறுப்பினரிடமிருந்து கொள்வனவு செய்திருப்பதாகவும்இந்த கடலட்டைகளும் இம்மாதத்தில் ஏற்றுமதி செய்யப்படவிருப்பதாகவும் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கு)

# தோல்வி கண்டு மனம்தளரக் கூடாது

(வரணி)

'தோல்விஅடைந்து விட்டோம் என்பதற்காக மனம் தளரக் கூடாது. தொடர்ந்து முயற்சி செய்தால் எந்தவொரு விடயத்திலும் வெற்றி காணமுடியும்.'

இவ்வாறு வரணி தெற்கு கலைவித்தியாசாலையில்நடைபெற்ற வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு. பே. ரமேஸ்வரநாதன் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு ச. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கோப்பாய் எம் பி. திரு. சி. கதிரவேலுபிள்ளைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ தங்கராசா சிறப்புரையாற்றினார். திருமதி .ப . கதிரவேற்பிள்ளை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார். மேற்படி விளையாட்டுப் போட்டியில் கல்யாணி இல்லம் முதலாவது இடத்தையும் இரஞ்பனி இல்லம் இரண்டாவது இடத்தையும் பாவளி இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் லைன்மாடி.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU
50 சதம்

சகல திருத்த வேலைகளையும் எம்மிடம் ஒப்படையுங்கள்
- றேடியோக்கள்
- ரேப ரெக்கோடர்கள்
- தொலைக்காட்சிப் பெட்டிகள்
- பிற மின் பொருட்கள்

அனைத்தையும் குறைந்த காலத்தில் சீரமைத்துக் கொடுப்போம்.
டில்கா றேடியோ அன் ரி. வி. ரெக்னிசன்ஸ்
(பஸ்நிலையத்திற்கு முன்பாக மேல்மாடி)
202B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8174

## அஸாம்: உத்தரவு ரத்து?

(கௌஹாட்டி)
இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாம் மாநிலம், ''கலகம் பாதித்த பிரதேசம்'' என்று மாநில அரசு விடுத்த பிரகடனத்தை தடுத்துவைக்குமாறு கௌஹாட்டி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மத்திய அரசின் பணிப்பின் மீது மாநில அரசு விடுத்த உத்தரவு செல்லுபடியாகாது என்று ஒருவரின் மனு மீது நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

தொகுதிக்கு ஒரு ஆலயப்பிரவேசம்:

# ''காலக்கெடு முடிந்ததும் நடவடிக்கை தொடரும்!''

## வெகுஜன இயக்கத்தலைவர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
''தொகுதிக்கொரு ஆலயம் என்ற அடிப்படையில் அவைகளைத் திறந்துவைக்கக் கோரி, கடந்தவருடம் அக்டோபர் மாதம் 21ல் நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் கோவில் முகாமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆறு மாத காலக்கெடு இம்மாதத்துடன் முடிவடைகிறது. எனவே இந்த முடிவிலிருந்து வெகுஜன இயக்கம் தனது நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்தும் என்பதனைப் பகிரங்கப்படுத்துகிறது.''

நேற்று முன்தினம் வதிரி தேவரயாளி இந்துக் கல்லூரியில் வெகுஜன இயக்கத்தினால் நடத்தப்பட்ட கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் இயக்கத்தலைவர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

வடமராட்சிக்கென மட்டும் விஷேசமாகக் கூட்டப்பட்ட இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில், வடமராட்சிப் பகுதிக்கென வெகுஜன இயக்கம் முன்வைத்திருக்கும் நடவடிக்கைகள்யாவும், இதற்கென விசேஷமாகக் கூட்டப்பட இருக்கும் சகல கட்சிப்பிரமுகர்களும், அரசாங்க நிர்வாக அதிகாரிகளும், பொதுவான சமூக ஊழியர்களும், பொதுமக்களும் உள்ளடக்கிய ஒரு மகாநாட்டிலேயே பகிரங்கப்படுத்தப்படும் என்றும் வெகுஜன இயக்கத்தின் இந்த நியாயமான கோரிக்கைகளை நல்லெண்ணம் கொண்ட சகலரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று தாம் திடமாக நம்புவதுடன், வெற்றியும் கிடைக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் ஐந்துமணி நேரம் வரை நீடித்த இக்கருத்தரங்கில், பல அரசியல் கருத்துக்களைக்கொண்டோரும் வெகுஜன இயக்க வேலை முறைகளுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கமைய, ஆலயப்பிரவேச நடவடிக்கைகளுடன் இதற்கெல்லாம் மூல காரணமாகவுள்ள நிலப்பிரச்னையையும் முன்வைப்பதென்று முடிவெடுக்கப்பட்டு, மாநாட்டு நடவடிக்கைகளுக்காக 18 பேரைக் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. எதிர்வரும் ஜூன் மாதம் 28ம் திகதி மாநாடு நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

### யாழ். அரச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தட்டெழுத்து இயந்திரங்களை வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மூன்று தமிழ் தட்டெழுத்து இயந்திரங்களைக் கொண்ட யாழ். அரசாங்க செயலகத்துக்கு நேற்று 44 தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்புதிய ஏற்பாடு பொது மக்களுடன் சுமுகமானமுறையில் தொடர்புவைத்துக்கொள்ளவும், சிறப்பான நிர்வாகம் நடைபெறவும் மிகவும் உதவியாக இருப்பதுடன் பலருக்கு வேலைவாய்ப்பளிக்கவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி அமைச்சு அதிகாரிகள் மட்டுமே

# ஆசிரியர்களின் வேலையை மதிப்பீடு செய்யவேண்டும்

(புளியங்குளம்)
''ஆசிரியர்களின் வேலையை மதிப்பீடு செய்யும் உரிமை கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு மாத்திரமே வழங்கப்படவேண்டும். ஏனைய அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து ஆசிரியர்களின் வேலைகளில் குறுக்கீடு செய்வதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானமொன்று வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற ஆசிரியர்கள் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

வவனியா மாவட்ட அமைச்சின் வேண்டுகோளின்பேரில் ஒழுங்குசெய்யப்பட்ட ஓராசிரியா, ஈராசிரியர்களுக்கான கூட்டத்தில் பிரதம கல்வி அதிகாரி திரு. ரி. எம். சிமியாம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:.

''வவுனியா, முல்லைத்தீவு தனித்தனியாக இரண்டு நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டபொழுதும் இதுவரையும் முல்லைத்தீவுக்கென கல்வி அலுவலகம் அமைக்கப்படவில்லை. இதனால் இரண்டு மாவட்டங்களையும் வவுனியா கல்வி மாவட்டம் நிர்வகிக்க வேண்டியுள்ளது. இரண்டு மாவட்ட அமைச்சர்களும் இதனைக் கவனத்திற்குக் கொண்டுவந்து விரைவில் புதிய கல்வி மாவட்டத்தை நிறுவவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்'' என்றார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சில வருமாறு:-

''தற்பொழுது தனியாசிரிய பாடசாலைகளாக இயங்கும் 35 பாடசாலைகளுக்கும் உடனடியாக ஓர் உதவியாசிரியரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்

பதில்அதிபர்களாகக் கடமை புரிபவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படல்வேண்டும்.'' (கு)

# ''அரசின் நல்ல திட்டத்தை எதிர்க்கும் தீய சக்திகள்''

## ஊழியர் மன்ற செய்திபற்றி வ. போ. ச. சபைத் தலைவர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய போக்குவரத்து சபை ஊழியர் ஒருவர், இலங்கைப் போக்குவரத்து சபை இயக்குநராக நியமிக்கப்படவேண்டுமென்ற அரசின் நல்ல திட்டத்தை விரும்பாத சில சக்திகள் அது சம்பந்தமாக அன்று நடைபெற இருந்த ஆலோசனைக் கூட்டத்தை முறியடிக்க விரும்பி மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த ஒருசில ஊழியர் மன்ற உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு கூட்டத்தில் கலந்து கொள்ளாது வெளியேறினர்.''

இம் மாதம் 6ம் தேதி ''ஈழநாடு'' பத்திரிகையில் ஊழியர் பேரவை தொடர்பாக வெளிவந்த செய்தியையொட்டி வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகர விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''ஊழியர் பேரவைகள் அமைக்கப்பட்ட பின்னர் கடந்த ஒரு மாத காலத்திற்குள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பல்வேறு சாலைகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக ஊழியர்மன்ற உறுப்பினர்களை இம்மாதம் 4ந் தேதி என்னைச் சந்திக்கும்படி வேண்டுகோள் விடுத்தேன். ஊழியர் பேரவை உறுப்பினர்கள் என்றவகையில் அவர்களின் பொறுப்புக்கள் பற்றிப் பேசுவதற்கும் மதியுரை கூறுதலே அவர்கள் கடமை என்பதை அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கும், உசாவல் மூலமும் மதியுரை மூலமும் சபையின் கொள்கைகளை செயற்படுத்துவதில் முகாமைக்கு உதவவேண்டுவதற்குமாக அவர்களைச் சந்திக்கவிருந்தேன். ஊழியர் பேரவைகளின் உறுப்பினர்கள் 60 பேரையும் ஒரே தடவையில் சந்திப்பதற்கு எனது காரியாலய அறையில் இடவசதி இல்லாத காரணத்தினால் ஊழியர் பேரவைத் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் சந்தித்தேன். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் யாழ். பொதுசன நூலக மண்டபத்தில் உறுப்பினர்கள் யாவரையும் கண்டு கலந்துரையாடவிருந்தேன். அவர்களுக்கு வேண்டிய சிற்றுண்டிவகைகளுக்குக் கூட ஏற்பாடு செய்திருந்தேன். ஆயினும் தலைவர்கள் துணைத் தலைவர்கள் உடனான கலந்துரையாடல் எதிர்பார்த்ததைக்காட்டிலும் கூடியநேரம் நீடித்தது. இதனால் எல்லா உறுப்பினர்களையும் காண்டதில் தாமதம் ஏற்பட்டது இதற்கிடையில் சிலர் வெளியேறினர். தற்போதைய அரசினால் பாராளு

[5-ம் பக்கம் பார்க்க[

### வாகனப் பதிவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
சாங்க அதிபரின் கார் பதிவு செய்யப்பட்டது. இன்றுமுதல் வாகனப் பதிவுகள் தொடர்ந்து நடைபெறுமென சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க)

# ''வன்னிவள நாட்டுப்பாடல்'' 19-ல் வெளியீட்டு விழா

(முல்லைத்தீவு)
''வன்னிவள நாட்டுப் பாடல்'' நூல் வெளியீட்டு விழா, எதிர்க்கட்சித்தலைவரும் கூட்டணிச்செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் இம்மாதம் 19ம் திகதி சிறப்பாக நடைபெறுகிறது.

வன்னி நாட்டில் உள்ள மரபுவழி வாய்மொழி இலக்கியமான நாட்டுப்பாடல்கள் சிதறுண்டும் அழியும் நிலையிலும் இருந்ததை ஏடுகளில் இருந்தும் ஏட்டுப் பிரதிகளில் இருந்தும் தொகுத்து யாழ். கல்வித்திணைக்களத்தைசேர்ந்தவரும், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளரும் தொழிற்சங்கப் பிரமுகருமான திரு. செல்லையா மெற்ருஸ் மயில் ''வன்னிவள நாட்டுப் பாடல்கள்'' ஆக வெளியிடுகின்றார்.

முல்லை இலக்கியவட்டம் வெளியிடும் இந் நூலின் முக்கிய ஆலோசகர்களாக, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் முல்லைமணி வே. சுப்பிரமணியம், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் நா. சுப்பிரமணிய ஐயரும் விளங்குகின்றனர். நூல் வெளியீட்டுவிழா 19ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெறுகிறது.

யாழ் மாவட்ட வெளியீட்டு விழாவையடுத்து முல்லைத்தீவு, வவனியா ஆகிய மாவட்டங்களிலும் வெளியீட்டுவிழா அடுத்துவரும் கிழமைகளில் சிறப்பாக நடைபெறவுள்ளது. கொழும்பு, கண்டி, திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, தண்ணீரூற்று, துணுக்காய், ஆகிய இடங்களிலும் அறிமுகவிழாக்கள் இடம்பெறவிருக்கின்றன.

## மரண அறிவித்தல்

### திருமதி சென்ஜோர்ஜ் ருக்கினி

அச்சுவேலியைச் சேர்ந்த சென்ஜோர்ஜ் ருக்கினி காலமானார். இவர் காலஞ்சென்ற சாம் சென்ஜோர்ஜ்ஜின் அன்பு மனைவியும், அன்ரனி [Autos & Palm Court], காலஞ்சென்ற அப்புக்காத்து ஜோசெப், வைத்திய கலாநிதிஜோன் [அவுஸ்திரேலியா] கலாநிதி சாள்ஸ் [Chairman, Silk Authority], விக்டர் [Craigley, Patana], வைத்திய கலாநிதி அல்பிரட் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜோசெப் (Ceylon Merchants), காலஞ்சென்ற திருச்செல்வம், வேதநாயகம், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, கன்னியாஸ்திரி மரீனு, திருமதி பெனடிற் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவர். அன்னாரின் பூதவுடல் அச்சுவேலியில் வைக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக இம்மாதம் பத்தாம் திகதி வியாழக்கிழமை மாலை நான்கு மணிக்கு யாழ்ப்பாணம் பாம் கோட் விடுதியிலிருந்து யாழ்ப்பாணம் பேராலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

'Georgia Villa', Atchuvely 5427

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 8-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. QD/98/78 The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu' Phone: 889.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org